வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

# ஈழநாடு

Eelanadu

24.09.2020 வியாழக்கிழமை

விலை ரூ. 20/=

## எம்.பிக்களின் கோப்புகள் சுமக்க பொலிஸாரை வழங்க முடியாது

### இராஜாங்க அமைச்சர் சமல் சாட்டை

கொழும்பு, செப்.24

பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புக்காக வழங்கப்படும் பொலிஸாரின் எண்ணிக்கையை ஒருபோதும் அதிகரிக்க முடியாது எனப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அத்துடன், நாட்டில் 85 ஆயிரம் பொலிஸ் அதிகாரிகளே இருக்

02

# 20ஆவது திருத்தம் பேராபத்துடையது!

### சபையில் கஜேந்திரன் எம்.பி. எச்சரிக்கை



கொழும்பு, செப் 24

அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் நாட்டில் எதிர்காலத்தில் பாரிய நிதி மோசடிக்கு வழிவகுக்கும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

02



## 5 மாடிக் கட்டடம் தீக்கிரை!

### பண்டாரவளையில் சம்பவம்

கொழும்பு,செப்.24

பண்டாரவளை நகரில் சென். ஜோசப் பாடசாலைக்கு அருகில் அமைந்துள்ள ஐந்து மாடிக் கட்டடத் தொகுதியில் நேற்று மாலை 4.15 மணிளவில் தீப் பரவல் ஏற்பட்டது.

இந்தத் தீ விபத்தில் கெமிகெதர உணவகம் முற்றாகத் தீக்கிரை

02

## நீதித்துறை சுயாதீனத்தை இல்லாமல் செய்யும் ‘20’!

### பொதுநலவாய அமைப்புக்கள் கவலை

கொழும்பு,செப்.24

பாராளுமன்றத்தில் பொது ஜன பெரமுன அரசால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் அரசமைப்புக்கான 20 ஆவது திருத்தச் சட்டவரைவு நிறைவேற்றப்படும் பட்சத்தில், நீதித்துறையின் பக்கச்சார்பின்மைக்கும் சுயாதீனத் தன்மைக்கும் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் குறித்து பொதுநலவாயத்தைச் சார்ந்த

02

## வீடமைப்பு அதிகார சபையின் அலுவலகத்துக்குள் கோட்டா!

### அதிரடியாகப் புகுந்து சோதனை



கொழும்பு, செப் 24

வீட்டு வசதி அபிவிருத்தி அதிகார சபை நாரஹன்பிட்டி அலுவலகத்துக்குள் திடீர் கண்காணிப்புக்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சென்றுள்ளார்.

நேற்று மாலை அலுவலகத்துக்கு திடீரென சென்றிருந்த ஜனாதிபதி

02

### பயங்கரவாதத்தின்

## சர்வதேச வலையமைப்பு உயிர்ப்புடன்!

### ஐ.நா. கூட்டத்தில் ஜனாதிபதி உரை

கொழும்பு,செப்.24

இலங்கை மண்ணிலிருந்து பயங்கரவாதம் ஒழிக்கப்பட்ட போதிலும், அதன் சர்வதேச வலையமைப்பு இன்னும் செயற்படுகின்றது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட அரசுக்கு உதவுவது, ஐக்கிய நாடுகள் சபையின் பொறுப்பாகும் எனவும் ஜனாதிபதி கோட்டாபய தெரிவித்தார்.

நேற்று அதிகாலை காணொலி தொழில்நுட்பத்தின் ஊடாக, ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்

02

# 20க்கு எதிராக 6 வழக்குகள்!

### சம்பந்தனும் அதிரடியாகத் தாக்கல்

கொழும்பு, செப். 23

பாராளுமன்றத்தில் அரசு சமர்ப்பித்துள்ள இருபதாவது திருத்தத்துக்கு எதிராக இது வரை ஆறு மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அவற்றில் ஒன்றுதமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் மூத்த தலைவர் இரா.

02

## 20 ஆம் திருத்தத்துக்கு சட்டச் சிக்கல் இல்லை!



### சரத் வீரசேகர உறுதி

கொழும்பு,செப்.24

எதிர்த்தரப்பினரது ஆதரவின்றி அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றிக் கொள்ள முடியும். அதற்கு, மக்கள் வாக்கெடுப்பு அவசியமில்லை என சட்டமா

02

### திலீபன் நினைவேந்தலுக்குத் தடை

## தமிழ்க்கட்சிகள் நேற்று யாழில் மீண்டும் கூடின

### இன்று தீர்ப்பின் பின் தீர்மானம்

யாழ்ப்பாணம்,செப்.24

திலீபன் நினைவேந்தல் தொடர்பில் யாழ்ப்பாணம் நீதிமன்றக் கட்டளை இன்று பிறப்பிக்கப்படவுள்ள நிலையில், அந்தக் கட்டளையின் பின்னரே, தமிழ்த் தேசியக் கட்சிகளின் அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில், இறுதி முடிவு எடுக்கப்படுமென்று கட்சிகளின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் இன்று மீண்டும் கூடி நீதிமன்றத் தீர்மானம் தொடர்பில் கலந்துரையாடி எடுக்கப்

02

## அரசியல் நோக்கத்துக்காக 13 ஐ பயன்படுத்தி குழப்பம்

### அமைச்சர் டக்ளஸ் சபையில் சாடல்

கொழும்பு,செப்.24

13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக ஒவ்வொருவரும் தங்களது அரசியல் தேவைகளுக்காக பல்வேறு கருத்துக்களை முன்வைத்து குழப்பங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றனர் என்று குற்றம்சாட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

02

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## 20ஆவது திருத்தம்...

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2019ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டுக்கான நிதி ஆணைக்குழுவின் செயலாற்றுகை அறிக்கை, தேர்தல்கள் ஆணைக்குழுவின் 2019ஆம் ஆண்டுக்கான மூன்றாவது காலாண்டு செயலாற்றுகை அறிக்கை ஆகியவற்றின் மீதான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தின் உறுப்புரை 41 ஆ வின் பிரகாரம் கணக்காய்வு சேவை ஆணைக்குழு உருவாக்கப்பட்டிருந்தது. ஆனால், புதிதாகக் கொண்டுவரப் படவுள்ள 20ஆவது திருத்த யோசனை யின் பிரகாரம் அது முற்றாக நீக்கப்படுகின்றது.

உறுப்புரை 153 (1) இன் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகம் ஒருவர் தகைமை பெற்ற கணக்காய்வாளராக இருத்தல் வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. ஆனால், புதிதாக வரவுள்ள 20ஆவது திருத்தச் சட்ட யோசனையின் பிரகாரம் தகைமை பெற்ற கணக்காய்வாளராக இருத்தல் வேண்டும் என்பது நீக்கப்பட்டுள்ளது.

உறுப்புரை 153 (4) இன் பிரகாரம் அரசமைப்புப் பேரவையின் விதப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகம் ஒருவரை ஜனாதிபதி நியமிக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால், புதிதாக வரவுள்ள 20ஆவது திருத்த யோசனையில் அரசமைப்புப் பேரவையின் எந்தவொரு விதப்புரையும் இன்றி ஜனாதிபதி ஆளொருவரை நியமிக்கலாம் என்றவாறு மாற்றப்பட்டுள்ளது.

உறுப்புரை 154 (1) இன் பிரகாரம் அரச திணைக்களங்களதும் ஜனாதிபதி செயலாளர் அலுவலகத்தினதும் ஜனாதிபதி செயலாளர் அலுவலகம் பிரதம அமைச்சரது செயலாளர் அலுவலகம் என்பவற்றின் கணக்குகளை கணக்காய்வு செய்தல் வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால், புதிய 20 ஆவது திருத்தச் சட்ட வரைவில் ஜனாதிபதி செயலாளர் அலுவலகம் பிரதம் அமைச்சரது செயலாளர் அலுவலகம் என்பன நீக்கப்பட்டுள்ளது.

உறுப்புரை 154 (2) இல் அரச கம்பனிகளின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல் வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால், புதிய 20ஆவது திருத்த யோசனையில் குறித்த அரச கம்பனி என்பது நீக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் பாரிய ஊழல், மோசடிகளில் ஈடுபட்ட அரச கம்பனிகளைக் கணக்காய்வு செய்யும் பொறுப்பு கணக்காய்வாளர் நாயகத்தில் பொறுப்புக்கள் அதிகாரங்களில் இருந்து நீக்கப்பட்டுள்ளது.

உறுப்புரை 154 (VI) இன் பிரகாரம் பகிரங்க கணக்குகளை கணக்காய்வு செய்து பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிப்பதற்கும் கணக்காய்வாளர் நாயகத்தின் கடமைகளும் பொறுப்புக்களும் அதிகாரங்களும் 20ஆவது திருத்தயோசனையில் பறித்தெடுக்கப்பட்டுள்ளது.

எனவே , இவ்வாறான செயற்பாடுகள் எதிர்காலத்தில் நாட்டில் பாரிய நிதி மோசடிகளும், ஊழல்களும் இடம்பெறுவதற்கே வழிவகுக்கும் - என்றார்.

## வீடமைப்பு அதிகார...

அங்கு அதிகாரிகளுடன் கலந்துரையாடினார் எனத் தெரிவிக்கப்பட்டது.

வீட்டுத்திட்டப் பயனாளி ஒருவர் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைய ஜனாதிபதி இந்த கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## நீதித்துறை...

நான்கு அமைப்புக்கள் ஆழ்ந்த கவலை வெளியிட்டு அறிக்கையொன்றை விடுத்துள்ளன.

பொதுநலவாய நீதிவான்கள் மற்றும் நீதிபதிகள் சங்கம், பொதுநலவாயத்தின் சட்டக்கல்வி சங்கம், பொதுநலவாய சட்டத்தரணிகள் சங்கம், பொதுநலவாய பத்திரிகையாளர்கள் சங்கம் ஆகிய அமைப்புகளே நீதிபதிகளுக்கான நீதிபதிகள் என்ற அமைப்புடன் இணைந்தே இந்த அறிக்கையை வெளியிட்டிருக்கின்றன.

அந்த அறிக்கையில்- அரசின் மூன்று பிரிவுகளுக்கும் இடையிலான உறவு முறை மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்
பிலான பொதுநலவாய (லற்றிமார் ஹவுஸ்) கோட்பாடுகளையும் பொது நலவாய சாசனத்தையும் அடியொட்டி நடப்பதாக இலங்கை அரசால் விசேட மாக உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது.

20 ஆவது திருத்தச் சட்டமூலத்தில் தற்போது பிரேரிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களை அல்லது நியமிக்கப்படுபவர்களை உள்ளடக்கிய தான பாராளுமன்றப் பேரவை சுயாதீன அமைப்பொன்றின் மெய்க்கருத்துக்கு எந்தவகையிலும் இசைவானதாக இல்லை.

மேலும், 20 ஆவது திருத்தச் சட்டமூலத்தின் 107 ஆம், 109 ஆம், 111 ஆம் சரத்துக்களின் ஏற்பாடுகள் நீதித்துறையின் எந்தவொரு சிரேஷ்ட நியமனத்தையும் பாராளுமன்றப் பேரவையின் பிரத்தியேகமான அங்கீகாரம் அல்லது ஆலோசனை இன்றி ஜனாதிபதி செய்வதற்கு அதிகாரங்களை வழங்குகிறது. பிரேரிக்கப்பட்டுள்ள திருத்தத்தின் கீழ், ஜனாதிபதி பாராளுமன்ற பேரவையின் அவதானிப்புக்களை மாத்திரமே பெற வேண்டிய தேவை இருக்கிறது.

இது பொதுநலவாய (லற்றிமார் ஹவுஸ்) கோட்பாடுகளுக்கும் சுயாதீனமான நீதித்துறை தொடர்பான ஐக்கிய நாடுகளின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கும் அதிகார வேறாக்கலின் மெய்க் கருத்துக்கும் பொதுநலவாய சாசனத்துக்கும் முரணானதாக அமைகிறது. அதனால், நாம் உத்தேச அரசமைப்பு மாற்றங்கள் பொதுநலவாய அடிப்படை விழுமியங்களுக்கும் நீதித்துறையின் சுயாதீனம் மற்றும் அதிகாரங்கள் வேறாக்கல் ஆகியவை தொடர்பான சர்வதேச தராதரங்களுக்கும் இசைவான முறையில் அமைவதை உறுதிப்படுத்துமாறு நிறைவேற்று அதிகார பீடத்தையும் பாராளுமன்றத்தையும் நாம் கேட்டுக் கொள்கின்றோம் - என்றுள்ளது.

## 20க்கு எதிராக...

சம்பந்தன் எம். பியின் சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சஜித் பிரேமதாஸவின் மக்கள் ஐக்கிய சக்தி உட்பட ஆறு தரப்புகள் நேற்று பிற்பகல் வரை மேற்படி இருபதாவது அரசமைப்புத் திருத்தத்தை ஆட்சேபித்து வழக்குத் தாக்கல் செய்துள்ளன.

இரா.சம்பந்தன் மற்றும் மாற்றுக் கொள்கைக்கானமையம் ஆகியவற்றின் சார்பில் சட்டத்தரணி மோகன்பாலேந் திரா உயர் நீதிமன்றத்தில் நேற்று இந்த மனுக்களைத் தாக்கல் செய்தார்.

இரா.சம்பந்தனின் சார்பில் ஜனாதி பதி சட்டத்தரணி கனகேஸ்வரனும், மாற் றுக் கொள்கைகளுக்கான மையத்தின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரனும் இந்த மனுக்கள் தொடர் பான விசாரணைகளில் முன்னிலையாகி வாதிடுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் திங்கட்கிழமை வரை இந்த விடயத்தை ஒட்டி மனுக்கள் தாக்கல் செய் யப்படலாம் என்றும் -

இன்னும் ஆறுக்கு மேற்பட்ட மனுக் கள் தாக்கல் செய்யப்படுவதற்கு வாய்ப்புகள் உண்டு என்றும் - தெரியவந்தது.

## 20ஆம் திருத்...

அதிபர், சான்று வழங்கிய பின்னரே சட்டவரைவு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றது. ஆகவே, சட்ட ரீதியில் எவ்வித நெருக்கடிகளும் ஏற்படாது என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் பல குறைபாடுகளைக் கொண்டுள்ளது என, நான் ஆரம்பத்திலேயே சுட்டிக்காட்டினேன். ஒரு வார காலத்திற்குள் அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தை கொண்டுவருவதாக, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்ற அக்ராசன உரையில், வாக்குறுதி வழங்கினார்.

மைத்திரியின் வாக்குறுதியை நம்பி அனைவரும் அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்துக்கு ஆதரவு வழங்கினர். இந்தத் திருத்தத்தால் எதிர்காலத்தில், முத்துறையினருக்கும் இடையில் ஏற்படும் முரண்பாடுகளை முன்கூட்டி உணர்ந்து 19 ஆவது திருத்தத்திற்கு ஆதரவு வழங்கவில்லை.

அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தை இரத்துச் செய்து புதிய திருத்தத்தை தற்காலிக ஏற்பாடாக, கொண்டு வருவதுடன் நாட்டுக்குப் பொருந்தும் அரசமைப்பையும் உருவாக்குவதாக நாட்டு மக்களிடம் பிரதான இரண்டு தேர்தல்களின் போது வாக்குறுதி வழங்கினோம்.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் தொடர்பிலான சட்ட மூல வரைபை சட்டமா அதிபர் திணைக்களம் முழுமையாக பரிசீலனை செய்தது. மக்கள் வாக்கெடுப்புக்கு செல்ல வேண்டிய எவ்வித ஏற்பாடுகளும் மூலவரைவில் குறிப்பிடப்படவில்லை. அதனால், மக்கள் வாக்கெடுப்பு அவசியமில்லை.

இருப்பினும், 20 ஆவது திருத்தத்தை பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்ற வேண்டும் எனச் சட்டமா அதிபர் குறிப்பிட்டதன் பின்னரே திருத்தம் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டது - என்றார்.

## பயங்கரவாதத்தின்...

தொடரில் உரையாற்றிய போது ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 75 ஆவது கூட்டத்தொடரின், அரச தலைவர்களுக்கான மாநாடு, இலங்கை நேரப்படி, நேற்று முன்தினம் இரவு 9 மணிக்கு, அமெரிக்காவின் நியூயோர்க் நகரிலுள்ள, ஐ.நா. தலைமையகத்தில் காணொலி தொழில்நுட்பத்தின் ஊடாக ஆரம்பமானது.

இந்த மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி,"போதைப்பொருள் தொடர்பான சமூக பொருளாதாரப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண, இலங்கை ஆழ்ந்த உறுதியுடன் உள்ளது.

சட்டவிரோத போதைப்பொருள் உற்பத்தி மற்றும் கடத்தலில் ஈடுபட்டுள்ள, நாடு கடந்த குற்றவியல் குழுக்களின் அதிகரித்து வரும் நுணுக்கங்கள் குறித்து, இலங்கை தீவிர கவனம் செலுத்தியுள்ளது.

போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிப்பதற்கும், பாதுகாப்பான நாட்டை உருவாக்குவதற்கும், ஜனாதிபதி செயலணி ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இது நிறுவப்பட்டதில் இருந்து, பாராட்டத்தக்க பெறுபேறுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

மூன்று தசாப்தங்களாக பிரிவினைவாதத்தையும் பயங்கரவாதத்தையும் அனுபவித்த இலங்கை, உள்நாட்டு அல்லது சர்வதேச ரீதியில், அனைத்துப் பயங்கரவாத செயல்களையும் மிக வன்மையாகக் கண்டிக்கிறது - என்றார்.

## தமிழ்க்கட்சிகள்...

படும் முடிவு குறித்து ஊடகங்களுக்கு அறிவிக்கப்படுமென்றும் கட்சிப் பிரதிநிதிகள் குறிப்பிட்டனர்.

திலீபன் நினைவேந்தலுக்கு அரசு தடை விதித்திருக்கும் நிலையில் அந்தத் தடை உத்தரவை நீக்கவேண்டுமென தமிழ்த் தேசியக் கட்சிகள் பலவும் இணைந்து அரசிடம் கோரிக்கை விடுத்து ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்திருந்தன.

இதேவேளை, தடை உத்தரவு தொடர்பில், யாழ்ப்பாணம் நீதிமன்றில் வழக்கு நடைபெற்று வரும் நிலையில், அந்த வழக்குத் தொடர்பான நீதிமன்றக் கட்டளை இன்று அறிவிக்கப்படுமென தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இந்நிலையில் நேற்று மாலை நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் ஒன்றுகூடிய தமிழ்த் தேசியக் கட்சிகள், திலீபன் நினை வேந்தல் தொடர்பில் கலந்துரையாடி யிருந்தன.

இந்தக் கூட்டத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி மற்றும் தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் என 9 தமிழ்த் தேசிய அணிகள் கலந்து கொண்டிருந்தன.

## அரசியல்...

இந்த விடயத்தில் அரசு இதுவரை எந்தவிதமான தீர்மானங்களையும் மேற்கொள்ளவில்லை எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற தேர்தல்கள் ஆணைக்குழுவின் செயற்பாடு தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகை யிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாகாண சபை முறைமையானது எமக்குக் கிடைத்திருந்த காலந்தொட்டு, அதனை எமது மக்கள் நலன் சார்ந்து செயற்படுத்தியிருந்தால், இன்று எமது மக்களின் அனைத்துப் பிரச்னைகளும், முடிந்தவரையில் தீர்க்கப்பட்டிருக்கும் என்பதை தான் தொடர்ச்சியாகத் தெரிவித்து வருகிறார் என்றும்,எனினும், இந்த அதிகாரத்தைப் பெற்றவர்களும், அபகரித்துக் கொண்டவர்களும் அதனை ஒழுங்குற செயல்படுத்திருக்கவில்லை எனவும் அவர் குற்றம்சாட்டினார்.

## எம்.பிக்களின்...

கின்றனர். அவர்களில் 38 ஆயிரம் பேர் மக்கள் பிரதிநிதிகளின் பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றனர்.

மக்கள் பிரதிநிதிகளுக்கு பொதுமக்கள் தொடர்பில் நம்பிக்கை இருக்கவேண்டும். அவ்வாறு, நம்பிக்கை இல்லாதவர்களே பொலிஸ் பாதுகாப்பு கோருகின்றனர். அவ்வாறு இல்லாவிட்டால் உறுப்பினர்களின் கோப்புக்களை தூக்கிச் செல்லவா பொலிஸ் பாதுகாப்புக் கோருகின்றனர் எனக் கேட்கின்றேன்.

அத்துடன், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மாத்திரமல்ல முழு நாட்டுக்கும் பாதுகாப்பு வழங்க நாங்கள் தயார்.

ஆனால், உறுப்பினர்களின் கோப்புக்களைத் தூக்கிச்செல்ல பொலிஸார் வழங்க முடியாது. அதற்கு, பொலிஸாரைத் தரவும் மாட்டோம் என்றும் நேற்று பாராளுமன்றத்தில் கூறினார்.

## 5 மாடிக் கட்டடம்...

யானது.

பண்டாரவளை நகரசபை தீயணைப்பு அதிகாரிகளும், பண்டாரவளை பொலிஸ் நிலைய அதிகாரிகளும், கடும் போராட்டத்துக்குப் பின் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்தத் தீ விபத்து தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
24.09.2020 வியாழக்கிழமை
சார்வரி, புரட்டாதி 08

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**gmail:- eelanaduweekly@gmail.com**

**தொலைபேசி : 021 492 7805**

# அரசாங்கத்திற்குள் பிளவு?

20 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் பல்வேறு வாதங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பில் சட்டத்தரணி இந்திக்க கால்லகே என்பவர் உச்ச நீதிமன்றத்தில் மனு ஒன்றையும் தாக்கல் செய்திருக்கின்றார். அதேவேளை, 20 ஆவது திருத்தச்சட்ட விவகாரம் உள்நாட்டுக்குள் தொடர்சியாக விவாதிக்கப்படுகின்ற நிலையில், அது தற்போது சர்வதேசத்தின் கவனத்தையும் பெற்றிருக்கின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளரும் இது தொடர்பில் கவலை தெரிவித்திருக்கின்றார். இலங்கை, அதன் ஜனநாயக பாதையிலிருந்து விலகிச் செல்கின்றது என்றவாறான ஒரு பார்வை சர்வதேச சமூகத்தினர் மத்தியில் ஏற்பட்டிருக்கின்றது. இதன் விளைவாகவே எதிர்பார்த்தது போன்று 20 ஆவது திருத்தச்சட்ட விவகாரத்தை அரசாங்கத்தால் முன்னெடுக்க முடியாதளவிற்கு நெருக்கடிகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆரம்பத்தில் இவ்வாறான விடயங்களெல்லாம் அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் மிகவும் சாதாரணமானது என்றவாறான ஒரு பார்வையே இருந்தது. ஏனெனில், பொதுஜன பெரமுன பெற்றுக்கொண்ட வெற்றியானது அவ்வாறானதொரு பார்வையையே பலருக்கும் வழங்கியிருந்தது. ஆனால், எதிர்பார்த்தது போன்று நிலைமைகள் அவ்வளவு எளிதாக இல்லை.

20 ஆவது திருத்தச் சட்டத்தை முன்வைத்து அரசாங்கத்திற்குள் பிளவு ஏற்பட்டிருப்பதாக எதிரணியினர் கூறி வருகின்றனர். 19 ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்று ஜனாதிபதியின் பல்லை கணிசமானளவிற்கு பிடுங்கிவிட்டது. அதேவேளை, பிரதமரை அதிகம் பலமுள்ளவராகவும் மாற்றியிருந்தது. இந்த நிலையில் தொடர்ந்தும் 19 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் அரசாங்கம் இயங்குமாயின், ஜனாதிபதியால் பெரிதாக எதனையும் செய்ய முடியாது. ஆட்சி முற்றிலுமாக அவர்களின் கைகளில் இருப்பதால் உடனடியான பிரச்னைகள் இல்லாவிட்டாலும்கூட, ஜனாதிபதியைப் பொறுத்தவரையில் தான் நினைக்கும் விடயங்களை செய்வதற்காக அவர் அதிகம் மற்றவர்களில் தங்கியிருக்கின்ற நிலைமையே ஏற்படும்.

அதேவேளை, 19 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ளடங்கியிருக்கும் இரட்டைக் குடியுரிமை விவகாரம் உண்மையில் ராஜபக்ஷ குடும்பத்தின் தலையீட்டைத் தடுக்கும் வகையில்தான் கொண்டுவரப்பட்டது. இந்த நிலையில் மீண்டும் பஷில் ராஜபக்ஷவை அதிகாரத்திற்குள் கொண்டுவர வேண்டுமாயின் அதனை நீக்க வேண்டும். ஆனால், அதனை நீக்கினால் புலம்பெயர் புலிகள் நாட்டை கைப்பற்றிவிடுவார்கள் என எதிரணியினர் ஒரு கோஷத்தை கையிலெடுத்திருக்கின்றனர். அதேவேளை ஒரு தனிநபரை வைத்து இவ்வாறானதொரு மாற்றத்தை செய்ய முடியாதென்னும் பார்வை அரசாங்கத்திற்குள் இருப்பவர்கள் மத்தியிலும் காணப்படுகின்றது.

அதேவேளை, 19 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் பிரதமருக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் நீக்கப்படுமாக இருந்தால் அதன் பின்னர் மஹிந்த ராஜபக்ஷவும் அதிகாரமற்ற ஒருவராக ஆகிவிடுவார். தான் ஓர் அதிகாரமற்ற பிரதமராக இருப்பதை மஹிந்த விரும்புவாரா? இந்த நிலமைகளை முன்வைத்து பேசுபவர்கள், மஹிந்த ராஜபக்ஷ, 20ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் தனக்குள்ள அதிகாரங்களை இழக்க விரும்பவில்லை. இதன் காரணமாகவே, 20 ஆவது திருத்தச்சட்டத்திற்கு எதிராக அரசாங்கத்திற்குள் காணப்படும் எதிர்ப்புக்களை அவர் கண்டும் காணாமல் இருக்கின்றார் - மஹிந்த நினைத்தால் இவற்றை இலகுவாகக் கையாள முடியும் என்று வாதிடுகின்றனர். இதன் காரணமாக சகோதரர்களுக்கிடையில் பிணக்குள்ளதாகவும் ஒரு பார்வையை முன்வைக்கின்றனர். ஆனால், நிச்சயமாக தங்களுக்குள் மோதிக்கொள்ள ராஜபக்ஷக்கள் விரும்புவார்களா? ஏனெனில், அவ்வாறு தங்களுக்குள் மோதிக் கொண்டால் அதனால் ஏற்படப் போகும் பலன்களை யார் அனுபவிப்பர்? எனவே மீண்டும் அதிகாரம் பிறிதொரு தரப்பின் கைகளுக்கு செல்வதை அவர்கள் ஒருபோதுமே அனுமதிக்கப் போவதில்லை. முடிந்தவரையில் பிரச்னைகளை சமாளித்துத் தங்களைப் பலப்படுத்திக்கொள்ளவே முயற்சிப்பர்.

# ‘சிவகாமியின் சபதத்தில்’ வரும் விஷமக்கார பிக்குவை நினைவூட்டும் அம்பிட்டிய சுமணரத்ன தேரர் !

- அலசுவது இராஜதந்திரி -

அமரர் ‘கல்கி’யின் பிரபல சரித்திர நாவலான சிவகாமியின் சபத்தில் வருகின்ற நாசகார புத்த பிக்குவான நாகநந்தி அடியின் விஷமத்தனமான நடவடிக்கைகளை கண்முன் கொண்டுவந்து நிறுத்துவது போலவே மட்டக்களப்பு மாவட்டத்தில் இருக்கின்ற அம்பிட்டிய சுமணரத்ன தேரரின் செயற்பாடுகள் விளங்குகின்றன.



பாராளுமன்றில் கூட பிரஸ்தாபிக்கப்படும் அளவுக்கு இப்புத்த பிக்குவின் பித்தலாட்டம் வலுவடைந்துள்ளது.

இதுபற்றி தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் பாராளுமன்றில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், இப்பிக்கு தொடர்ந்தும் அடாவடித் தனமான நடவடிக்கைகளில் ஈடுபட்டால் மட்டக்களப்பு மக்கள் பொறுத்துக் கொள்ளமாட்டார்களெனவும் எச்சரித்துள்ளார்.

**‘கடந்த பல வருடங்களாகவே அம்பிட்டிய சுமணரத்னதேரரின் அட்டகாசங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. சாந்த சீலரான கௌதம புத்தரின் போதனைகளையே களங்கப்படுத்துவதுபோல இத் தேரர் தனது அடாவடித்தனங்களில் ஒரு கேடியைப்போன்று நடந்து வருகின்றார்.’**

கடந்த பல வருடங்களாகவே அம்பிட்டிய சுமணரத்னதேரரின் அட்டகாசங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. சாந்த சீலரான கௌதம புத்தரின் போதனைகளையே களங்கப்படுத்துவதுபோல இத்தேரர் தனது அடாவடித்தனங்களில் ஒரு கேடியைப்போன்று நடந்து வருகின்றார்.

கடந்த திங்கட்கிழமை தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் சிலரை அம்பிட்டிய சுமணரத்ன தேரர் தாக்கியுள்ளார். அத்துடன், முன்னர் பிரதேச செயலகமொன்றுக்குள் நுழைந்து அங்குள்ள அரச உடமைகளுக்கும் சேதம் விளைவித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூடவே, கிறிஸ்தவ மதகுரு ஒருவரையும் இப்பிக்கு சில மாதங்களுக்கு முன்னர் தாக்கியுள்ளார்.

இந்நிலையில், இத்தேரர் உண்மையிலேயே ஒரு பௌத்த துறவியா? அல்லது காவி உடைதரித்த காடையனா? என்று மக்கள் எண்ணுமளவுக்கு அவரது நடவடிக்கைகள் மட்டக்களப்பில் அமைதி, நல்லெண்ணம் என்பவற்றுக்கு குந்தகம் விளைவிப்பதாக உள்ளன.

தொல்பொருள் ஆய்வு குறித்த நிலப்பகுதியொன்றில் வைத்தே இத்தேரர் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்தி தமது கைவரிசையைக் காட்டியுள்ளார்.

இந்த நடவடிக்கை சம்பந்தமாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டம் யுத்தத்தினால் வெகுவாக பாதிக்கப்பட்ட பிரதேசமாகும். அத்துடன் கிழக்கிலங்கையில் மூவின மக்களும் அந்நியோன்னியமாக வாழும்சூழ்நிலை இங்கு மேலும் பலப்படுத்தப் படவேண்டியதாகவுள்ளது.

இத்தருணத்தில் இந்த விஷமக்கார பிக்குவின் செயற்பாடுகள் இன நல்லுறவுக்கும், அமைதிக்கும் குந்தகம் விளைவிப்பதாகவே அமைந்துள்ளன.

யுத்தம் முடிவுற்று பத்து ஆண்டுகள் ஆகிவிட்டன. எனவே, கடந்தகால கசப்பான அனுபவங்களை கருத்திலெடுத்து அம்பிட்டிய சுமணரத்ன தேரர் போன்ற பித்தலாட்டப் பேர்வழிகளை கட்டில்போட வேண்டியதே காலத்தின் தேவையாகும்.

தொல்பொருள் ஆய்வு, அதற்கான செயலணி என்றெல்லாம் ஆரம்பிப்பது புராதன காலத்தை நோக்கிச் செல்வதாக இருக்கின்றதே தவிர, எதிர்காலத்தை கருத்திலெடுப்பதாக இல்லை.

ஆகவே அம்பிட்டிய சுமணரத்னதேரர் போன்றவர்களை வைக்கவேண்டிய இடத்தில் அரசு வைக்கவேண்டும். இல்லையேல் இன நல்லுறவு பெரிதும் பாதிக்கப்படுவதோடு, காவி உடையில் பௌத்த மதத்துக்கு களங்கம் ஏற்படுத்தும் ஒரு பேர்வழியாகவே அம்பிட்டிய சுமணரத்னதேரர் இருப்பார் என்றே கருதமுடியும்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



செய்திகள்



# நானாட்டானில் சிக்கின பழங்கால நாணயங்கள்!



மன்னார், செப் 24

மன்னார் - நானாட்டான், வடக்கு வீதி என்ற இடத்தில் மீன் மற்றும் வாள் சின்னங்கள் பொறிக்கப்பட்ட 1900 மேற்பட்ட நாணயங்கள் மற்றும் பானை ஓடுகள் போன்ற தொல்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை காணி உரிமையாளரால் புதிய வீடு அமைப்பதற்கு அத்திபாரம் அமைக்கக் குழி தோண்ட முற்பட்டபோதே பழங்கால பொக்கிஷங்கள் மீட்கப்பட்டன.

இந்த விடயம் தொடர்பாக நானாட்டான் பிரதேச சபையின் உப தவிசாளருக்கு தெரியப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து உப தவிசாளர் இது குறித்து முருங்கன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் கவனத்துக்கு கொண்டுவந்தார்.

இதனை தொடர்ந்து அந்த நாணயக் குற்றிகள் முருங்கன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன.

இந்த நாணயக் குற்றிகள் யாவும் மன்னார் நீதிமன்றத்தின் ஊடாக தொல்பொருள் திணைக்களத்திடம் கையளிக்கப்படவுள்ளதாக முருங்கன் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.



# பெண் போராளிகளின் எச்சங்கள் முகமாலைப் பகுதியில் மீட்பு

கிளிநொச்சி, செப் 24

கிளிநொச்சி, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முகமாலைப் பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் பெண் உறுப்பினர்களின் எலும்பு எச்சங்கள், சீருடைகள், இரண்டு சயனைட் குப்பிகள் மற்றும் இரண்டு இலக்கத் தகடுகள் என்பன நேற்று முன் தினம் மீட்கப்பட்டுள்ளன.

அந்தப் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு கொண்டிருக்கும்போது சீருடைகளுடன் மனித எச்சங்கள் இனங்காணப்பட்டு பளை பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து கிளிநொச்சி மாவட்ட நீதவான் த.சரவணராஜா முன்னிலையில் நேற்று முன் தினம் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவரின் புகைப்படமும் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

# கூட்டமைப்பு- மனோ அணி விரைவில் முக்கிய சந்திப்பு!

## தேசிய ரீதியில் ஒன்றிணைந்து செயற்படுவது குறித்து



கொழும்பு, செப் 24

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையிலான விசேட கலந்துரையாடலொன்று விரைவில் நடைபெறவுள்ளது.**

தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கான தீர்வுகளைப் பெறுவதற்கு தேசிய மட்டத்தில் ஓரணியில் திரண்டு செயற்படுவது தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்படவுள்ளது என அறியமுடிகின்றது.

அத்துடன், ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும் முற்போக்குக் கூட்டணி இது விடயம் சம்பந்தமாக பேச்சு நடத்தும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து, 'தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம்' அமைப்பதற்கு முன்வரவேண்டும் என்ற அழைப்பை எட்டாவது பாராளுமன்றத்திலேயே கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக்குழுக் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது. இதன்போது இவ்விவகாரம் பற்றியும் பரிசிலிக்கப்படவுள்ளது என தெரியவருகின்றது.

# தடை செய்த வலைகளை பயன்படுத்திய மூவர் கைது

கொழும்பு, செப் 24

புத்தளம் களப்புப் பகுதியில் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடித்த மூவர் நேற்று முன் தினம் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கற்பிட்டி சோத்துப்பிட்டி வாடிய பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகக் கடற்தொழில் மற்றும் நீரியல்வளங்கள் திணைக்களத்தின் புத்தளம் மாவட்ட உதவிப்பணிப்பாளர் சரத் சந்ரனாயக்க தெரிவித்துள்ளார் .

கடற்தொழில் திணைக்களத்தின் புத்தளம் மாவட்ட அலுவலக அதிகாரிகளுடன் இணைந்து கற்பிட்டி கடற்படையினர் மற்றும் கடற்படையின் இரகசியப் பிரிவின் அதிகாரிகள் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களும், அவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட வலைகளும், இயந்திரப்படகு உள்ளிட்ட உபகரணங்களும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கடற்தொழில் மற்றும் நீரியல்வளங்கள் திணைக்களத்தின் புத்தளம் மாவட்ட அலுவலக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டெங்கு,எலிக்காய்ச்சல் குறித்து மருத்துவர் சங்கம் எச்சரிக்கை!

கொழும்பு,செப்.24

நாட்டில் மழையுடன் கூடிய காலநிலை நீடிப்பதால், பொதுமக்கள் டெங்கு, எலிக்காய்ச்சல், இரைப்பை நோய்கள் குறித்து விழிப்புடன் இருக்க வேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

வழக்கமாக ஜூன், ஜூலை மற்றும் நவம்பர் தொடக்கம் ஜனவரி வரையான காலப்பகுதிகளில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரிப்பது தொடர்பில், அரச மருத்துவ அதிகாரிகள் சங்க நிறைவேற்றுக் குழு அங்கத்தவர் மருத்துவர் ஹரித அளுத்கேவிடம் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வயல் அறுவடை மற்றும் ஈரத்தரைகளில் மக்கள் செயற்படும் போது மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டும்.

மழை வெள்ளத்தின் போது ஏற்படும் வயிற்றுப்போக்கு, ஏனைய இரைப்பை நோய்களிலிருந்து பொதுமக்கள் தம்மைத் தற்காக்க கொதித்தாறிய நீரைப் பருகுவதுடன், நன்கு சமைத்த உணவை உண்ண வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

நாட்டின் திறமையான செயற்பாட்டால் டெங்கு மரணங்கள் கடந்த பல வருடங்களில் குறைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.



# நானு ஓயாவில் 25 அடி உயரம் வளர்ந்துள்ளது கோவாச் செடி!

கொழும்பு, செப் 24

நுவரெலியா நானுஓயா உடரதல்ல தோட்டத்தில் வசிக்கும் எஸ்.சரவணபவன் என்பவரின் வீட்டு தோட்டத்தில் வளர்த்த இலைக் கோவா செடி 1500 நாட்கள் ஓங்கி வளர்ந்ததை முன்னிட்டு அவர் கேக் வெட்டி பூசை செய்துள்ளார்.

தனக்கு 4 வருடங்களாக உணவளித்தமைக்காக அவர் கோவா செடிக்கு பூசை செய்து கேக் வெட்டி கொண்டாடினார்.

கோவா செடி 25 அடி உயர மரமாக வளர்ந்து பல கிளைகளைத் தந்து பாரிய அளவில் விளைச்சலை கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது குறித்து சரவணபவன் கருத்து தெரிவிக்கையில்,

இந்த கோவா செடியை 2016 ஆம் ஆண்டு தான் நாட்டினேன். வழமையாக கோவா செடியொன்று ஒரு வருட காலம் தான் பலன் தரும். ஆனால் இந்த கோவாச் செடியை தொடர்ந்தும் பராமரித்து வருவதால் இன்று இந்த கோவாச் செடி மரமாகி நான்கு வருடங்களாக பலன் தந்து கொண்டிருக்கிறது. விவசாயத்திற்கு கௌரவமளிக்கும் நாட்டில் நான் பிறந்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்- என்றார்.

# புத்தாக்கத்துறையில் சிறந்து விளங்கும் நாட்டை நான் நிச்சயம் உருவாக்குவேன்

## ஜனாதிபதி கோட்டா திடசங்கற்பம்

கொழும்பு,செப்.25

**புத்தாக்கத்துறையில் உலகில் சிறந்து விளங்கும் நாட்டை உருவாக்குவதற்கான சூழலை நான் நிச்சயம் ஏற்படுத்துவேன் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.**

**உள்நாட்டு, வெளிநாட்டு சந்தைகளின் கேள்விக்கு ஏற்ற வகையில் சர்வதேச தரம் வாய்ந்த வினைத்திறன்மிக்க தொழில்நுட்ப வல்லுநர்களை உருவாக்குவது முக்கிய தேவையாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.**



சாதாரண தரம் அல்லது உயர் தரத்தில் சித்தியடைந்த, சித்தியடையாத அனைவருக்கும் தொழில்நுட்பம் மற்றும் தொழில் கல்வியை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தை குறுகிய காலத்தில் ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் பற்றியும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

திறன்விருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி, புத்தாக்கத்துறை இராஜாங்க அமைச்சின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி, இவ்வாறு குறிப்பிட்டார்.

பொருளாதாரத்திற்கு ஏற்ற வகையில் இளைஞர் தலைமுறையை கல்வித்துறையில் ஈடுபடுத்துவதன் அவசியம் குறித்து விளக்கிய ஜனாதிபதி, கலைப் பாடங்களை கற்கும் மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்பம், தாதி மற்றும் முகாமைத்துவம் உள்ளிட்ட பல துறைகளில் திறமைகளை வளர்த்துக்கொள்ள முடியுமென்றும் குறிப்பிட்டார்.

ஆராய்ச்சி துறையை ஊக்குவிப்பதற்கு அரசு என்ற வகையில் அனைத்து உதவிகளையும் வழங்குவதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

புத்தாக்க நடவடிக்கைகளுக்கு உதவுவதற்கு ஆலோசனை மற்றும் சேவைகளை வழங்குவதை ஒரே நிறுவனத்தின் கீழ் கொண்டு வரவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் வைத்தியர் சீத்தா அரம்பேபொல குறிப்பிட்டார்.

கோள் மண்டலத்தை தற்காலத்திற்கு பொருத்தமான வகையில் நவீனமயப்படுத்தவும், நனோ தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் உயிர் தொழில்நுட்பப் பூங்கா ஆகிய இரண்டையும் ஒரே வளாகத்தில் ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தை இராஜாங்க அமைச்சர் சீத்தா அரம்பேபொல சுட்டிக்காட்டினார்.

தேசிய அடிப்படை நிறுவனம் மற்றும் நனோ தொழில்நுட்ப நிறுவனம் இணைந்து ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத் துறைகளில் ஈடுபட வேண்டியதன் அவசியம் பற்றி ஜனாதிபதி வலியுறுத்தினார்.

பல்கலைக்கழகங்கள், தொழில்கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளின் பாடத்திட்டங்கள் மற்றும் கலைத்திட்டங்களை தற்காலத்திற்கு ஏற்ற வகையில் அறிமுகப்படுத்துவதற்கு துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

உயர் கல்வி சட்டத் திருத்தத்தின் மூலம் நிறுவன மற்றும் கலைத்திட்டம் தொடர்பில் உள்ள பல பிரச்னைகளுக்குத் தீர்வுகளை வழங்க முடியுமென நிபுணர்கள் சுட்டிக்காட்டினர்.

தொழில்நுட்ப பாடங்களுக்கான ஆசிரியர்கள் மற்றும் ஆலோசகர்களை இணைத்துக் கொள்ளும்போது குறைந்த மட்டத்தில் இருக்கும் சம்பளத் திட்டங்கள் பெரிதும் பாதிப்பு செலுத்துவதாக நிறுவனத் தலைவர்கள் தெரிவித்தனர்.

சமுத்திர பொருளாதாரத்தின் விளைவுகளைப் பெற்றுக் கொள்வதற்கு மீனவச் சமூகங்களிடம் சென்று தொழில்நுட்ப அறிவு மற்றும் பயிற்சியை வழங்குவதற்கு சமுத்திரப் பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொருளாதார புத்தெழுச்சிக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பஷில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர, அமைச்சரவை மற்றும் இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள், துறை சார் அமைச்சுக்களின் தலைவர்கள் மற்றும் நிபுணர்கள் இக்கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

# பரீட்சை திகதிகள் அறிவிப்பு

கொழும்பு, செப் 24

2020ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 12 ஆம் திகதி தொடக்கம் 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்த பரீட்சைக்காக நாடு முழுவதும் அமைக்கப்பட்டுள்ள 2648 மத்திய நிலையங்களில் பரீட்சை நடைபெறவிருப்பதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பி.சனத் பூஜித தெரிவித்தார்.

இதேவேளை, 2020 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 11 ஆம் திகதி நாடு முழுவதிலும் உள்ள 2936 மத்திய நிலையங்களில் நடைபெறவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பரீட்சை நடைபெறவுள்ள காலப்பகுதிக்குள் பரீட்சை மத்திய நிலையங்கள் அமைந்துள்ள பாடசாலைகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு சுகாதார அமைச்சு, தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு, மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் வலயகல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள் உள்ளிட்டோருக்கு இது தொடர்பாக அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# ‘20’ அரசுக்கு எதிரான அலையை உருவாக்கும்

## சட்டத்தரணி சுதர்ஷன சுட்டிக்காட்டு



கொழும்பு,செப்.24

ஜனநாயகத்திற்கு முரணான பல்வேறு அம்சங்களைக் கொண்ட அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தின் விளைவாக கடந்த 2010 - 2015 வரையான காலப்பகுதியில் அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் மத்தியில் ஏற்பட்ட எதிர்ப்பு அலையைப் போன்ற நிலைவரம் எதிர்காலத்திலும் ஏற்படக்கூடும் என்று சட்டத்தரணி சுதர்ஷன குணவர்த்தன சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கத்தால், முன்மொழியப்பட்டிருக்கும் அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் தொடர்பில், மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள இலங்கை மன்றக்கல்லூரியில் கலந்துரையாடல் நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கடந்த 2015 ஆம் ஆண்டில் ஜனநாயகத்தை வென்றெடுப்பதற்கான ஆட்சிமாற்றமொன்றுக்கு வாக்களித்தவர்களில் பலர் இம்முறை புதிய அரசாங்கத்திற்குவாக்களித்திருப்பார்கள் என்றே நினைக்கின்றேன்.

ஏனெனில், அவர்கள் நாட்டில் புதியதொரு மாற்றத்தை எதிர்பார்த்திருக்கக்கூடும்.

எனினும், அதனைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் அரசமைப்புத் திருத்தத்தின் ஊடாக ஜனாதிபதியிடம் அதிகளவான அதிகாரங்களை வழங்குவதன் விளைவாக அந்த அரசாங்கத்திற்கு வாக்களித்த மக்களே அவமதிக்கப்படுகிறார்கள். 20 ஆவது திருத்தத்தின்படி ஜனாதிபதி தவறிழைக்கும் பட்சத்திலும்கூட அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத்தொடர முடியாத நிலை யேற்படுகின்றது - என்றார்.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வீணாக விமர்சிக்க வேண்டாம்

## சபையில் சிறீதரன் காட்டம்

கொழும்பு,செப்.24

வடக்கின் அபிவிருத்தியைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற எந்தவொரு நோக்கமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு இல்லை. கடந்த ஆட்சியாளர்களுக்கு நாம் முண்டுகொடுக்கவும் இந்த அபிவிருத்தி வேலைத் திட்டமே காரணம் என்று அக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் சபையில் காட்டமாக தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வாய்மூல விடைக்கான வினாக்களின்போது, “கிளிநொச்சி நகர மத்தியில் அமைந்துள்ள சதொச வர்த்தகக் கட்டடமானது கரைச்சி பிரதேச சபையின் முறையான அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளது. இது எவ்வாறு சாத்தியமாகும்”, என்று சிறீதரன் எம்.பி. கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த, அமைச்சர் பந்துல குணவர்த்தன, இந்த விடயம் குறித்து ஆராய்ந்து பார்க்க கிளிநொச்சிக்கு வரவுள்ளேன். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இந்த வேலைத்திட்டத்திற்கு தொடர்ச்சியாக எதிர்ப்பு வெளியிட்டு வருகின்றனர். யுத்தம் முடிவுக்கு வந்த காலத்திலிருந்து இது தொடர்ந்தது. எனினும், நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு இவற்றை கையாளும் அதிகாரம் உள்ளது. இதில் பிரதேச சபைகளை மீறி செயற்பட அதிகாரம் உள்ளது. எவ்வாறு இருப்பினும் உங்களின் பிரதேச அபிவிருத்தி வேலைத்திட்டங்களை ஊக்குவிக்க நீங்கள் ஒத்துழைக்க வேண்டும்- என்றார்.

இதன்பின், மீண்டும் கேள்வி எழுப்பிய சிறீதரன் எம்.பி, ‘நான் கேட்ட கேள்விக்கு நீங்கள் கூறும் பதில் எப்படி உள்ளதென்றால் ‘மாட்டைப் பற்றிப் பேசுங்கள் என்றால் மாட்டை தென்னம்பிள்ளையில் கட்டிவிட்டு தென்னம்பிள்ளை பற்றி பேசுவதை போன்றது. பிரதேச சபைக்கு உட்பட்ட காணியை சட்டவிரோதமாக அரசாங்கம் அபகரித்துள்ளது. அதுமட்டுமல்ல, எதற்கெடுத்தாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அபிவிருத்தியை எதிர்த்தது எனக் கூறுவதை முதலில் நிறுத்துங்கள். நாங்கள் ஒருபோதும் வடக்கின் அபிவிருத்தியை தடுக்கவில்லை. கடந்த நான்கு ஆண்டுகளில் அரசாங்கத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முட்டுக்கொடுத்தது என்ற பெயர் எப்படி வந்தது. அபிவிருத்திக்காக, அரசாங்கத்திற்கு முண்டுகொடுத்த காரணத்தாலேயே வந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்றும் அபிவிருத்தியை தடுக்கவில்லை.

எந்த நேரமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் கண் வைக்க வேண்டாம். சதொச கட்டடம் கட்டப்பட்ட வேளையில் காட்டு சட்டத்தை கையில் எடுத்துக்கொண்டே நிலம் அபகரிக்கப்பட்டது. இது நியாயமா? என்று கேட்டார்.

செய்திகள்

# 20 இற்கு ஆதரவானோர் குப்பைத்தொட்டிக்குள்!

## லக்ஷ்மன் கிரியெல்ல சொல்கிறார்

**கொழும்பு, செப் 24**

**20 இற்கு ஆதரவானவர்கள் குப்பைத்தொட்டியில் போடப்படுவார்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.**



பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாம் தேர்தல்களில் தோல்வியடைந்தாலும் ஒரு கொள்கையின் கீழ்தான் இதுவரை பயணித்துக்கொண்டிருக்கிறோம். அரச தரப்புக்குத்தான் ஒரு கொள்கையொன்று இல்லை. காலத்துக்குக் காலம் அவர்களின் கொள்கை மாறிக்கொண்டே செல்கிறது.

20இன் ஊடாக சுயாதீன ஆணைக்குழுக்கள் இல்லாது செய்யப்பட்டால் நாம் மீண்டும் பின்நோக்கி நகரவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமைக்கு உள்ளாவோம்.

20இற்கு ஆதரவளிப்பது என்பது எதிர்காலச் சந்ததியினரை காட்டிக்கொடுப்பது போன்றதாகும்-என்றார்.

# 20 ஆவது திருத்தம் குறித்து மக்கள் தெளிவுபெற வேண்டும்

## காவிந்த எம்.பி. ஆலோசனை

அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் தொடர்பில் நாட்டு மக்கள் தெளிவுபெற வேண்டும். மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தை அரசாங்கம் தவறான வழியில் பயன்படுத்துகின்றது. பாராளுமன்றில் சுட்டிக்காட்டப்படும் விடயங்கள் மக்கள் மத்தியில் முழுமையாகச் சென்றடைகின்றதா? என்ற சந்தேகம் தோற்றம் பெறுகின்றது என பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜெயவர்த்தன தெரிவித்தார்.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தை உருவாக்குவதாக அரசாங்கம் குறிப்பிட்டது. ஆனால், அத்திருத்தத்திற்குள் எவ்வித விடயங்களை உள்ளடக்குகின்றோம் என்று குறிப்பிடவில்லை. மக்களின் அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் ஏற்பாடுகளும் மறைமுகமாக உள்ளடக்கப்பட்டுள்ளன.

வர்த்தமானியில் வெளியாகியுள்ள அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் தொடர்பில், நாட்டு மக்கள் முதலில் தெளிவு பெற வேண்டும். அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தால் பாராளுமன்றத்தின் ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டு நிறைவேற்றுத் துறையின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டன. ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்ட நிலையிலும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசமைப்பை மீறி அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தி பாரிய விளைவுகளை ஏற்படுத்தினார். நல்லாட்சி அரசாங்கத்தின் வீழ்ச்சிக்கு மைத்திரியின் செயற்பாடு பிரதான பங்கு வகித்தது.

அரசமைப்பை திருத்துவதற்காகவும், புதிய அரசமைப்பை உருவாக்குவதற்காகவும் மக்கள், மூன்றில் இரண்டு பெரும்பான்மை வழங்கியுள்ளார்கள் என ஆளும் தரப்பினர் குறிப்பிட்டுக்கொண்டு பெரும்பான்மை பலத்தை முறைகேடாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

ஆகவே, 20 ஆவது திருத்தம் தொடர்பில் நாட்டு மக்கள் முதலில் தெளிவு பெற வேண்டும். நாட்டுக்கும், மக்களுக்கும் நன்மை பயக்கும் விடயங்களை எதிர்க்க வேண்டிய தேவை எதிர்தரப்பினருக்குக் கிடையாது - என்றார்.



# 13 அடி மலைப்பாம்பு சிக்கியது

கொழும்பு, செப் 24

பதுளை, லுனுகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹொப்டன் பழைய ஸ்டோர் தோட்டத்தில் 13 அடி நீளமும் 36 கிலோ எடையும் கொண்ட மலைப்பாம்பொன்று தோட்ட தொழிலாளர்களால் நேற்று பிடிக்கப்பட்டது.

# அரச காணிகளில் குடியிருப்பவர்களுக்கு ஆவணங்கள் வழங்கும் வர்த்தமானி ரத்து

கொழும்பு, செப் 24

ஆவணங்கள் எவையுமின்றி அரச காணிகளை அபிவிருத்தி செய்து அல்லது அவற்றில் குடியிருந்துவரும் மக்களுக்கு அக்காணிகளுக்கான சட்ட ரீதியான ஆவணங்களை வழங்குவது தொடர்பாக வெளியிடப்பட்ட அதிசிறப்பு வர்த்தமானி அறிவித்தல் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

2192/36 என்ற இலக்கமுடைய அந்த வர்த்தமானி அறிவிப்பை பின்வாங்குவதாக காணி ஆணையாளர் நாயகம் ஆர்.எம். சீ.எம். ஹேரத், இரத்துச் செய்யப்படுவதாக மற்றொரு அதுசிறப்பு வர்த்தமானி அறிவிப்பை நேற்று வெளியிட்டுள்ளார்.

கம்பஹா மற்றும் கொழும்பு தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் இதற்காக விண்ணப்பிப்பதற்குரிய மாதிரி விண்ணப்பப்படிவம் மற்றும் வழிகாட்டுநெறிகளை உள்ளடக்கிய அதிசிறப்பு வர்த்தமானி அறிவித்தல் காணி ஆணையாளர் நாயகத்தினால் கடந்த 10ஆம் திகதி வெளியிடப்பட்டது.

விண்ணப்பங்கள் இம்மாதம் 30ஆம் திகதி (2020.09.30) வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

பயனாளிகளைத் தெரிவு செய்வதற்கான காணிக் கச்சேரி 2020.11.01 ஆம் திகதியில் இருந்து 2020.11.21ஆம் திகதிக்கிடையில் இயைபுடைய பிரதேச செயலாளர் தீர்மானிக்கும் திகதியில் நடத்தப்படும் எனவும் வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய பாடசாலைகளில் இடைநிலை தரங்களுக்கு மாணவர் அனுமதி நிறுத்தம்

கொழும்பு, செப் 24

அனைத்து தேசியப் பாடசாலைகளிலும் இடைநிலை தரங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதை இடைநிறுத்தக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

தேசியப் பாடசாலைகளில் தரம் 1, 6ஆம் தரங்கள் தவிர்ந்த ஏனைய தரங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதையே கல்வி அமைச்சு இடைநிறுத்தத் தீர்மானித்துள்ளது.

# மலக்குடலில் சிக்கிய கைபேசியுடன் கைதி வைத்தியசாலையில் அனுமதி!

கொழும்பு, செப் 24

வெலிக்கடைச் சிறைக் கைதியொருவரின் மலக்குடலில் சிக்கியுள்ள கையடக்கத் தொலைபேசியை மீட்டெடுக்க, அந்தக் கைதி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கையடக்கத் தொலைபேசியை மீட்டெடுக்க வெலிக்கடைச் சிறை வைத்தியசாலையின் மருத்துவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் வெற்றியளிக்காததைத் தொடர்ந்து, கைதி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

போதைப்பொருள் குற்றம் தொடர்பாக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட சந்தேக நபர் சிறைக்கு திரும்புவதற்கு முன்னர் ஒரு கையடக்கத் தொலைபேசியை பெற்று, அதை தனது ஆசன வாய் ஊடாக மலக்குடலில் செலுத்தியுள்ளார்.

சிறை திரும்பிய பின்னர் அதை மீட்க முடியாமல் அவர் சிரமப்பட்டு, பின்னர் உடல் உபாதையுடன் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

# மஹிந்தவின் அதிகாரத்தில் கை வைக்க இடமளியோம்

## உறுதியாகக் கூறுகிறார் மஹிந்தானந்த

கொழும்பு,செப்.24

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அதிகாரங்களைக் குறைக்க நாம் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம்.

20 ஆவது திருத்தத்தில் திருத்தங்கள் தேவை என்றால் அதுதொடர்பில் கலந்துரையாட நாங்கள் தயார்.

அத்துடன் 20 ஐ நிறைவேற்றிக்கொள்ள எதிர்க்கட்சியிலிருந்து 20 பேரை அரசாங்கத்திற்கு எடுத்துக்கொள்வோம் என அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கட்டளை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

20 ஆவது திருத்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளபோதும் அதனை உடனடியாக நிறைவேற்ற முடியாது.

அதற்கு, எதிர்ப்பு இருக்குமானால் நீதிமன்றம் சென்று அதனைச் சவாலுக்குட்படுத்த காலம் வழங்கப்படுகின்றது.

அதேபோன்று, சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் சட்டமூலத்தில் திருத்தங்களை மேற்கொள்ளவேண்டும் என்றிருந்தால், எதிர்க்கட்சி பிரதமருக்கு அதுதொடர்பான திருத்தங்களைக் கையளித்தால் அதுதொடர்பில் கலந்துரையாட நாங்கள் தயார்.

யாருக்கேனும், பாதிப்பான விடயம் இருக்குமாக இருந்தால் அதில் திருத்தங்களை மேற்கொள்ள முடியும்.

மேலும், 20 ஆவது திருத்தத்தில் பிரதமரின் அதிகாரங்கள் நீக்கப்படுவதாக எதிர்க்கட்சி தெரிவிக்கின்றது.



யாருடைய அதிகாரங்களை நீக்கினாலும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அதிகாரங்களை நீக்க முடியாது.

அதற்கு, நாங்கள் இடமளிக்கமாட்டோம் என்பதை நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

மஹிந்த ராஜபக்ஷ, மீண்டும் போட்டியிட முடியாதவாறே 19 ஆவது திருத்தத்தை கொண்டு வந்தீர்கள்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து வேலை செய்ய முடியாததனாலேயே ஜனாதிபதியின் அதிகாரங்களை பிரதமருக்கு வழங்க நடவடிக்கை எடுத்தீர்கள்.

அதனால், 19 ஐ இல்லாமலாக்கவே மக்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அரசாங்கத்துக்கு வழங்கி இருக்கின்றனர்.

அதனால், நாட்டுக்குப் பாதகமான எந்தத் திருத்தத்தையும் நாங்கள் அனுமதிக்க மாட்டோம்.

அத்துடன், 20 ஆவது திருத்தச் சட்டவரைவு சமர்ப்பித்தமைக்கு எதிர்க்கட்சி எதிர்ப்பு தெரிவிக்கின்றபோதும், அதனை நிறைவேற்றிக்கொள்ள ஐக்கிய மக்கள் சக்தியில் இருக்கும் 54 பேரில் 17 பேர் அரசாங்கத்துக்கு ஆதரவளிக்க இருக்கின்றனர்.

ஆனால், 20 ஆவது திருத்தத்தை பாராளுமன்றத்தில் அங்கீகரித்துக்கொள்ள எதிர்க்கட்சியில் இருந்து நாங்கள் 20 பேரை எடுப்போம் - என்றார்.

# பூஜித, ஹேமசிறி மீதான விசாரணைகள் நிறைவு

கொழும்பு,செப்.24

**முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் கட்டாய விடு முறை வழங்கப்பட்டுள்ள பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர தொடர்பான விசாரணைகள் நிறைவடைந்துள்ளதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் கொழும்பு நீதவான் நீதிமன்றிற்கு நேற்று அறிவித்துள்ளது.**



உயிர்த்த ஞாயிறன்று நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலைத் தடுக்க நடவடிக்கை எடுக்காததன் மூலம், கொலைக் குற்றம் புரிந்ததாக குற்றம்சுமத்தி குறித்த நபர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இருவரும் நீதிமன்றப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், வழக்குத் தொடர்பான விசாரணைகள் நிறைவடைந்துள்ளதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றிற்கு அறிவித்துள்ளது.

# பொறுப்புக்கூறல் அற்ற நிலை இலங்கையில் நீடிக்கின்றது!

## ஐ.நா.செயலாளருக்கு விக்கி கடிதம்

யாழ்ப்பாணம்,செப்.24

குடியியல் பதவிகளுக்கு இராணுவத்தினரை நியமித்தல், போர்க்குற்றங்கள்,மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலை போன்றவற்றினோடு தொடர்பிருக்கும் அலுவலர்களின் குற்ற ஆராய்வு சம்பந்தமாக பொறுப்புக் கூறல் அற்ற நிலை நீடிப்பது தொடர்பில் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் செயலாளர் நாயகம் திருமதி மிசெல் பச்செலெட் ஜெரியாவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

விக்னேஸ்வரன் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில்,

'2020 செப்ரெம்பர் 14ஆம் திகதி உங்களால் வெளியிடப்பட்ட கருத்துரைக்கு இலங்கை என்ற தீபகற்பத்தின் தமிழ் மக்கள் தங்களது மனமார்ந்த நன்றியையும் வரவேற்பையும் தெரிவித்துக் கொள்கின்றார்கள்.

இலங்கை அரசாங்கத்தினுடைய கவலை தரும் போக்கினை நீங்கள் அறிந்துள்ளமை எமக்கு மகிழ்வைத் தருகின்றது. அதாவது, அதிகார நிறுவனங்களின் சுதந்திரத்தைப் பேணாதிருத்தல், குடியியல் பதவிகளுக்கு இராணுவத்தினரை நியமித்தல், போர்க்குற்றங்கள்,மனிதத்திற்கு எதிரான குற்றங்கள்,இனப்படுகொலை போன்றவற்றினோடு தொடர்பிருக்கும் அலுவலர்களின் குற்ற ஆராய்வு சம்பந்தமாக பொறுப்புக் கூறல் அற்ற நிலை போன்றவை அவை.

மேற்கூறிய அரசியல் ரீதியான குறைபாடுகளை வெளிக்கொண்டு வரவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதை தமிழ் மக்கள் சுட்டிக்காட்ட விரும்புகின்றார்கள். இது தனிப்பட்ட ஒரு ஜனாதிபதிக்கு அப்பால், தொடர்ந்து வந்த நிர்வாக அலகுகளின் செயற்பாடுகள் தங்களால் குறிப்பிடப்பட்ட பண்பியல்புகளை வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கின்றன.

இவை இலங்கையின் இதுவரை கால அரசாங்க முறைமையின் குறைபாடுகளாவன. இந் நாட்டினுடைய அரசியல் ரீதியான தத்துவார்த்த வெளிப்பாடுகள் இவை. இப்பிராந்தியத்தின் சமாதானத்திற்கும் நிரந்தர அபிவிருத்திக்கும் நீங்கள் கூறுவது போல் இவை பாதிப்பாக அமையக் கூடும் என்பதில் சந்தேகமில்லை.

மேலும், சர்வதேச வழிமுறைகளுக்கும் செயற்பாடுகளுக்கும் அமைய சகலரும் நடந்துகொள்வதில் தான் உண்மையான நல்லிணக்கம் ஏற்படும் என்பதில் தமிழ் மக்களிடையே மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

இதற்கான முக்கிய அடிப்படைக் கருத்துருவாக்கம் ஐக்கிய நாடுகள் சாசனத்தின் முதலாவது உறுப்புரையில் இடம்பெற்றுள்ளது. அதாவது, சர்வதேச சமாதானமும் பாதுகாப்பும் வெவ்வேறு மனிதக் குழுமங்களின் சம உரித்துக்களிலும் சுயநிர்ணயத்திலும் பிரிக்க முடியாதவாறு தங்கியிருக்கின்றன என்பதே அது.

மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் இலங்கை மீதான பார்வை சர்வதேச சமூகங்களுக்கு மீண்டும் சமாதானத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டிய அவசியத்தை அவர்களுக்கு எடுத்துக் காட்டுகின்றது. இதனை அடைய எடுக்கப்படும் சகல முயற்சிகளுக்கும் தமிழ் மக்கள் உற்ற துணையாக இருப்பார்கள் என்பதை உங்களுக்கு சொல்லி வைக்கின்றேன்- என்றுள்ளது.

# கட்டாரிலுள்ள இலங்கைத் தூதரகம் ஒக்டோபர் 5 வரை மூடப்பட்டிருக்கும்

டோஹா,செப்.24

கட்டாரின் தலைநகர் டோஹாவிலுள்ள இலங்கைத் தூதுரகம், அடுத்த இரண்டு வாரங்களுக்கு மூடப்பட்டுள்ளது.

குறித்த, தூதரகத்தின் ஊழியர் ஒருவர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதி செய்யப்பட்டதையடுத்தே இவ்வாறு தூதரகம் இரண்டு வாரங்களுக்கு மூடப்பட்டுள்ளது.

அந்தத் தூதரகம் ஒக்டோபர் 5 ஆம் திகதி வரை மூடப்பட்டிருக்கும்.

கட்டாரிலுள்ள இலங்கைத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மேலும் 43 இலங்கையர்கள் நேற்று நாடு திரும்பினர்

கொழும்பு,செப்.24

கொரோனா வைரஸ் தொற்று அச்சம் காரணமாக, ஏற்படுத்தப்பட்ட பயணக் கட்டுப்பாடுகளால் கட்டார் மற்றும் இந்தியாவில் சிக்கித் தவித்த 43 இலங்கையர்கள் நாடு திரும்பினர்.

டோஹாவிலிருந்து 42 பேரும், மும்பையிலிருந்து ஒருவரும் நேற்று அதிகாலை நாடு திரும்பினர்.

விமான நிலையத்தை வந்தடைந்த இவர்கள் அனைவரும், பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், தனிமைப்படுத்தலுக்காக, அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதேவேளை, 43 ஆயிரத்து 895 பேர் இதுவரை கட்டாயத் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்துள்ளனர்.

மேலும் 7,120 பேர் முப்படைகளால், பராமரிக்கப்பட்டு வரும் 68 தனிமைப்படுத்தல் நிலையங்களில் உள்ளனர்.

இதேவேளை, கொரோனாத் தொற்றாளர்களை அடையாளம் காண நேற்று முன்தினம் மட்டும் நாட்டில் 1,530 பி.சி.ஆர். சோதனைகள் நடத்தப்பட்டன.

பெப்ரவரி முதல் இதுவரை 2 இலட்சத்து 70 ஆயிரத்து 881 பி.சி.ஆர். சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# சபாநாயகருக்கு சபையில் பொப்பி மலர் அணிவிப்பு

கொழும்பு,செப்.24

உயிர்நீத்த பாதுகாப்புப் படையினரை நினைவுகூரும் முகமாக வருடாந்தம் நடத்தப்படும் பொப்பி தினத்தை முன்னிட்டு, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் வைத்து பொப்பி மலர் அணிவிக்கப்பட்டது.

பாதுகாப்புப் படைவீரர்கள் சங்கத்தின் 2020 பொப்பி மலர் நினைவு தினத்தின் தலைவர் குரூப் கப்டன் கே.டபிள்யூ. கிரிந்த சபாநாயகருக்கு பொப்பி மலரை அணிவித்தார்.

இந்நிகழ்வில்,பாராளுமன்றச் செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க, பாதுகாப்புப் படைவீரர்கள் சங்கத்தின் செயலாளர் லெப்டினனட் கேர்ணல் அஜித் சியம்பலாப்பிட்டிய உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# அரச போக்குவரத்துத்துறையை மேம்படுத்த அரசு புதிய திட்டம்

கொழும்பு,செப்.24

நாட்டின் தேசிய வருமானத்தில் மற்றுமொரு பிரதான காரணியாக அரச போக்குவரத்துச் சேவை காணப்படுகிறது. எனவே, போக்குவரத்துச் சேவை முறையாக இடம்பெற்றால் மாத்திரமே சிறந்த வருமானத்தைப் பெற முடியும்.

இதற்காக, ஏற்கனவே திட்டமிட்டுள்ள வேலைத்திட்டங்களை விரைவில் செயற்படுத்துவோம் என இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார்.

மேலும், மக்களின் பிரச்னைகளுக்குத் துரித தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்படும்.

தேசிய சொத்துக்களை வெளிநாடுகளுக்கு விற்றுக் கொண்டிருந்த அரசாங்கத்தை தோல்வியடையச் செய்வதே எமது இலக்காகக் காணப்பட்டது. எனினும், இவ்வாறான பிரச்னைகளுக்குத் துரிதமான தீர்வுகளைக் காண முடியாதுள்ளது. இதுதொடர்பிலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தற்போது, போக்குவரத்து பாரிய பிரச்னையாகக் காணப்படுகிறது. 2015 இற்கு முன்னர் பிரத மர் மஹிந்த ராஜபக்ஷவால் வழங்கப்பட்ட பேருந்துகளே தற்போதும் சேவையில் உள்ளன. இது தொடர்பில் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரிடம் கலந்துரையாடியுள்ளோம். இதற்காக, ஏற்கனவே திட்டமிட் டுள்ள வேலைத்திட்டங்களை விரைவில் செயற்படுத்துவோம் - என்றார்.

# நீதிமன்ற வளாகத்தில் தீ விபத்து!

கொழும்பு,செப்.24

கொழும்பிலுள்ள மேல் மாகாண நிரந்தர மேல் நீதிமன்ற வளாகத்தில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற கட்டடத் தொகுதியிலுள்ள குளிரூட்டியொன்றிலேயே இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

விரைந்து செயற்பட்ட தீயணைப்புப் பிரிவினர், தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

இந்த,விபத்து காரணமாக எந்தவித உயிர்ச் சேதமும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்



## மோதலை தவிர்க்க நகர்ந்தது சர்வதேச விண்வெளி நிலையம்

நியூயோர்க், செப். 24

விண்வெளிக் குப்பைகளுடன் மோதாமல் இருப்பதற்காக சர்வதேச விண்வெளி ஆய்வு மையம் நகர்த்தப்பட்டுள்ளது என்று நாஸா நிறுவனம் அறிவித்துள்ளது.

சர்வதேச விண்வெளி நிலையம் பூமியிலிருந்து சுமார் 260 மைல் உயரத்தில் (420 கிலோமீற்றர்), ஒரு மணி நேரத்திற்கு சுமார் 17,000 மைல் வேகத்தில் சுற்றுகிறது.

இந்நிலையில், விண்வெளியில் சுற்றும் ஜப்பானின் றொக்கெட்டின் ஒரு பகுதியுடன் மோதல் ஏற்படவிருந்த நிலையில் அதைத் தவிர்ப்பதற்காக ரஷ்யா மற்றும் அமெரிக்க விமானக் கட்டுப்பாட்டாளர்கள் ஒன்றாக இணைந்து இரண்டரை நிமிடம் அதன் சுற்றுப் பாதையை சரிசெய்து, மேலும் விலகிச் சென்று மோதலைத் தவிர்த்தனர்.

சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்து சுமார் 1.4 கிலோமீற்றர் (கிட்டத்தட்ட ஒரு மைல்) தொலைவில் இந்தக் குப்பைகள் கடந்து சென்றதாக நாஸா தெரிவித்துள்ளது.

விண்வெளிக் குப்பைகளுடன் மோதாமல் இருப்பதற்காக சர்வதேச விண்வெளி நிலையம் இவ்வாறு நகர்த்தப்படுவது வழக்கம். இதுபோன்ற 25 நகர்த்தல்கள் 1999 முதல் 2018 வரை நடந்ததாக நாஸா தெரிவித்துள்ளது. மேலும், இந்த நகர்த்தல் இந்த ஆண்டின் மூன்றாவது என்றும் நாஸா தெரிவித்துள்ளது.

## இந்தியாவுடன் பேசிக் கொண்டே போர் தளங்களை அமைக்கிறது சீனா

புதுடில்லி, செப். 24

இந்தியாவுடன் பேச்சு நடத்தும் அதேவேளை எல்லைப் பகுதியில் புதிய இராணுவ முகாம்கள், போர் விமான தளங்களை சீனா அமைத்து வருகின்றது. இந்தத் தகவலை பெல்ஜியம் நாட்டின் இராணுவ உக்தி தொடர்பான அமைப்பு ஒன்று வெளியிட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டு டோக்லாம் என்ற இடத்தில், சீனா நெடுஞ்சாலைப் பணியை தொடங்கிய போது, இந்தியா எதிர்ப்பு தெரிவித்தது. இதற்கு பிறகு இந்திய எல்லை அருகே புதிய இராணுவ முகாம்கள், போர் விமானத் தளம், ஹெலிகொப்டர் இறங்கு தளம் ஆகியவற்றை சீனா அமைக்க தொடங்கியது.

தற்போது லடாக் எல்லையில் சீனாவின் அத்துமீறலுக்கு இந்தியா பதிலடி கொடுத்த பிறகு, திபெத் பீடபூமியில் புதிய இராணுவ தளங்களை சீனா அமைத்தமை செயற்கை கோள் படங்கள் மூலம் தெரியவந்தது என்று பெல்ஜியம் நாட்டு அமைப்பு கூறியுள்ளது.

திபெத், மான்ஸரோவர் ஏரி அருகே புதிய ஏவுகணை தளங்களை சீனா அமைத்ததும் தெரியவந்துள்ளது. தற்போது லடாக் எல்லை அருகே புதிய இராணுவ தளங்களை சீனா அமைந்திருப்பதும் அம்பலம் ஆகியுள்ளது.

இதனிடையே, எல்லையில் நிலவும் பதற்றத்தை தணிப்பது தொடர்பாக இந்திய - சீன இராணுவ அதிகாரிகள் நேற்றுமுன்தினம் நடத்திய பேச்சில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# கொரோனாவுக்கு இரண்டாவது மருந்தை கண்டுபிடித்தது ரஷ்யா: பதிவுக்கும் தயார்

மொஸ்கோ, செப். 24

கொரோனாவை கட்டுப்படுத்தும் இரண்டாவது தடுப்பு மருந்தையும் ரஷ்யா கண்டுபிடித்துள்ளது. இதனை வரும் ஒக்ரோபர் 15 ஆம் திகதி பதிவு செய்யவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து 'டாஸ்' செய்தி நிறுவனம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'சேர்பியாவின் வெக்டர் நிறுவனம் கொரோனாவுக்கான தடுப்பு மருந்தைக் கண்டறிந்துள்ளது. கடந்த வாரம் கடைசிக் கட்ட மருத்துவ ஆய்வுகளுக்கு இம் மருந்து உட்படுத்தப்பட்டது. இந்த நிலையில் வரும் ஒக்ரோபர் 15 ஆம் திகதி கொரோனா தடுப்பு மருந்து பதிவு செய்யப்பட உள்ளது" என்று கூறப்பட்டுள்ளது.

முன்னதாக, ரஷ்யாவின் கமாலியா தொற்றுநோய் தடுப்பு நுண் அறிவியல் ஆய்வு நிறுவனம் ரஷ்யாவின் நேரடி முதலீட்டு நிறுவனத்துடன் இணைந்து முதல் தடுப்பு மருந்தைத் தயாரித்தது. இதற்கு ஸ்புட்னிக்-5 எனப் பெயரிட்டு கடந்த மாதம் பதிவு செய்தது.

இருப்பினும், மருந்தின் மீதான நம்பகத்தன்மையை மக்களுக்குத் தெரியப்படுத்தும் வகையில் தனது மகளுக்கே இந்த மருந்தைச் செலுத்தினார் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின். ஆனால், உலக ஆய்வாளர்கள் மத்தியில் ரஷ்யா கண்டுபிடித்துள்ள ஸ்புட்னிக்-5 மருந்து மீது முழுமையான நம்பிக்கை வராததால் அதனைத் தொடர்ந்து விமர்சித்து வந்தனர்.



இதனைத் தொடர்ந்து, தங்கள் தடுப்பூசி மருந்தை மூன்றாம் கட்டச் சோதனைகளுக்கு உட்படுத்தியது ரஷ்யா. இந்நிலையில் இரண்டாவது கொரோனா தடுப்பு மருந்தை ரஷ்யா அறிமுகப்படுத்தவுள்ளது.



## வயல்களில் நண்டு வளர்ப்பு சீன விவசாயிகள் புதுமுயற்சி

பீஜிங், செப். 24

சீனாவில் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்த வயல்களில் நண்டு வளர்ப்பை அரசாங்கம் ஊக்குவிக்கின்றது.

சிச்சுவான் மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் நெற் செய்கையில் நண்டுகளும் வளர்க்கப்படுகின்றன.

நெல், நண்டு இரண்டையும் ஒன்றாக வளர்ப்பதன் மூலம் நிலத்தின் வளம் மறு சுழற்சி செய்யப்பட்டு உற்பத்தி அதிகரித்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், இங்கு வளர்க்கப்படும் நண்டுகள் நாட்டின் பல பகுதிகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

2023 ஆம் ஆண்டுக்குள் பிராந்தியத்தை நெல் மற்றும் மீன் வளர்ப்பு நிலமாக மாற்றும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

நெல் பயிருடன் மீன் வளர்ப்பு தாய்லாந்தில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## சீனாவிலிருந்து இயங்கிய 150 'பேஸ்புக்' கணக்கு நீக்கம்

நியூயோர்க், செப். 24

சீனாவிலிருந்து இயங்கிய 150 போலி 'பேஸ்புக்' கணக்குகளைத் தடை செய்துள்ளதாக பேஸ்புக் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில், "நாங்கள் விதிமுறைகளுக்கு மாறாகச் செயல்பட்ட 155 பேஸ்புக் கணக்குகள், 9 குழுக்கள், ஆறு இன்ஸ்ட்ராகிராம் பக்கங்களை நீக்கியுள்ளோம். இதில் 150 பேஸ்புக் கணக்குகள் சீனாவைச் சேர்ந்தவை. இவை அமெரிக்கத் தேர்தல் பற்றிய தகவல்களைப் பதிவேற்றிக் கொண்டிருந்தன" என்று தெரிவித்துள்ளது.

போலிக் கணக்குகள் தொடர்பாக, அமெரிக்கா, பிலிப்பைன்ஸ், சீனா போன்ற நாடுகளைக் கவனமாகக் கண்காணித்து வருகிறோம் என்றும் பேஸ்புக் நிறுவனம் தெரிவித்தது.

## ஒரு வாரத்தில் 20 இலட்சம் பேருக்கு தொற்று

ஜெனிவா, செப். 24

கொரோனா தொற்று என்றுமில்லாதவாறு உலகளவில் பரவி வருகின்றது. கடந்த 14 - 20 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 20 இலட்சம் பேருக்கு புதிதாக கொரோனா தொற்றியுள்ளது என்று உலக சுகாதார நிறுவனம் அதிர்ச்சி தகவல் வெளியிட்டுள்ளது.

முன்னைய வாரத்துடன் ஒப்பிடுகையில் இது 6 வீதம் அதிகம் என்றபோதிலும், மரண வீதம் 10 வீதத்தால் குறைந்துள்ளது. எனினும், இந்த வாரத்தில் 36 ஆயிரத்து 764 பேர் மரணத்தை தழுவியுள்ளனர்.

தொற்றுக்கு இலக்கான 20 இலட்சம் பேர், வட, தென் அமெரிக்க கண்டங்களை சேர்ந்தவர்கள். பலி எண்ணிக்கையைப் பொறுத்தவரை ஐரோப்பாவே மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இங்கு இறப்பு எண்ணிக்கை 27 வீதத்தால் அதிகரித்துள்ளது என்றும் அந்த அமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது.



## சீனாவுக்கு உளவு பார்த்த பொலிஸ் அதிகாரி கைது

நியூயோர்க், செப். 24

சீனாவுக்கு உளவு பார்த்தார் என்ற குற்றச்சாட்டில் அமெரிக்க பொலிஸ் அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நியூயோர்க் நகரில் பணியாற்றி வந்த பய்மதாஜீ ஆங்வாங் (வயது33) என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். திபெத்தை பூர்வீகமாக கொண்ட இவர், அமெரிக்க குடியுரிமையை பெற்றிருந்தார். இவர் மூலமாக திபெத் சுதந்திர இயக்க ஆதரவாளர்களை சீன அரசுக்காக உளவு பார்த்ததாகக் குற்றச்சாட்டு எழுந்தது.

இதனைத் தொடர்ந்து, பய்மதாஜீயை கைது செய்த பொலிஸார், அவரிடம் விசாரணை நடத்தினர். இதனையடுத்து நியூயோர்க் நகரில் திபெத் மக்களின் நடவடிக்கைகள் குறித்து சீன அரசு அதிகாரிகளுக்கு தகவல் அளித்து வந்தது தெரியவந்தது.

மேலும், சீனத் தூதரகத்தில் பணியாற்றும் இரண்டு அதிகாரிகளுடன் அவர் தொடர்பில் இருந்தமையையும் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

# 20 ஆவது திருத்தத்தினால் ஆளும்கட்சிக்கே ஆபத்து!

## எச்சரிக்கிறார் விஜித ஹேரத் எம்.பி.



**கொழும்பு, செப் 24**

**நாட்டின் பொருளாதாரத்தை பலாத்காரமாக செயற்படுத்தவே நிறைவேற்று அதிகாரத்தை பெற்றுக்கொள்ள அரசாங்கம் முயற்சிக்கின்றது. 20ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டால் முதலாவது பாதிக்கப்படப்போவது ஆளுங்கட்சியே. அத்துடன் இந்த சட்டவரைவுக்கு ஆதரவளிப்பவர்கள் பிற்காலத்தில் கைசேதப்பட்டு மக்களிடம் மன்னிப்பு கோருவார்கள் என தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கட்டளை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்-

ஜே.ஆரின் 78ஆவது அரசமைப்பின் கொடூரத்தை மக்கள் உணர்ந்து கொண்டதால்தான், பின்னர் வந்த தலைவர்கள் நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாமலாக்குவதாக மக்களுக்கு வாக்குறுதி அளித்து தேர்தல்களில் வெற்றி பெற்றனர். ஆனால், அவர்கள் அதனை செய்யவில்லை. அந்தப் பின்னணியில் 17ஆவது திருத்தத்தைக் கொண்டுவர மக்கள் விடுதலை முன்னணி அப்போது இருந்த அரசுக்கு ஆதரவளித்தது. அதன்மூலம் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஓர் அளவு குறைக்க முடிந்தது.

ஆனால், அது நீண்ட காலம் செல்ல முன்னரே 18ஆவது திருத்தத்தை கொண்டுவந்து ஜனாதிபதியின் அதிகாரங்களை அதிகரித்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அப்போதும் 17க்கு ஆதரவளித்த அனைவரும் 18ஆவது திருத்தத்துக்கும் கை உயர்த்தினார்கள். ஆனால், 18ஆவது திருத்தத்தில் இருக்கும் ஜனநாயக விரோதமான விடயங்களை உணர்ந்து, அதற்கு ஆதரவளித்தவர்கள் பின்னர் கைசேதப்பட்டு மக்களிடம் மன்னிப்பு கோரினார்கள்.

அதேபோன்றே 19ஆவது திருத்தம் வந்தபோதும் அதற்கு ஆதரவளித்தவர்கள் தற்போது 20ஆவது திருத்தம் தேவை என கூச்சலிடுகின்றனர். இன்று 20 தேவை என்று கூச்சலிடுபவர்கள் இன்னும் சில காலத்தில் அதன் பயங்கரத்தை உணர்ந்து, மக்களிடம் மன்னிப்பு கோருவார்கள். 20ஆவது திருத்தம் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை பலாத்காரமாகச் செயற்படுத்துவதற்கான அதிகாரத்தை பெற்றுக் கொள்ளவே அரசு முயற்சிக்கின்றது-என்றார்.

# சட்டவிரோத செயற்பாடுகளை வடக்கில் கட்டுப்படுத்துங்கள்!

## பாதுகாப்பு செயலருக்கு ஆளுநர் கடிதம்



யாழ்ப்பாணம், செப் 24

பொதுமக்களின் ஒத்துழைப்பு இருந்தால்தான் வடக்கில் சட்டவிரோத செயற்பாடுகளை நிறுத்த முடியும் என வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் தெரிவித்தார்.

இதனைக் கட்டுப்படுத்துமாறு கோரி பாதுகாப்புச் செயலர் கமால் குணரத்னவுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார் என அவர் மேலும் கூறினார்.

யாழ் மாவட்டத்தில் சிறப்பாகச் செயற்பட்டு வரும் கிராமிய அமைப்புக்களான மாதர் சங்கங்கள், கிராம அபிவிருத்தி சங்கங்கங்களுடனான கலந்துரையாடல் நேற்று யாழ். பொது நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்-

வடக்கில் இடம்பெற்று வரும் சட்டவிரோத நடவடிக்கைகள் குறிப்பாக சட்டவிரோத மணல் அகழ்வுகள், போதைப் பொருள் பாவனைகள் தொடர்பாக அதிகளவான முறைப்பாடுகள் கிடைத்தவண்ணம் உள்ளன.

இதனைக் கட்டுப்படுத்துவதற்கு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோதும் அவை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படவில்லை.

இதனைக் கருத்திற்கொண்டு பாதுகாப்புச் செயலருக்கு எனது இணைப்புச் செயலாளரூடாக கடிதம் எழுதியுள்ளேன். விரைவில் இதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தினூடாகவும் அதனை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளேன். எது எவ்வாறு இருப்பினும் இதனை முற்றாகத் தடை செய்வதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு தேவை.

கிராமங்களில் உள்ள கிராமியப் பொது அமைப்புக்கள் இவை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெறுகின்றன எனத் தெரிந்தால் உடனடியாக பொலிஸாருக்கு தெரிவியுங்கள். அதிலும் நம்பிக்கையில்லை என்றால் கிராமிய திணைக்களங்களினூடாக எமக்கு அறிவியுங்கள்-என்றார்.

# கோபா குழுவின் தலைவராக திஸ்ஸ விதாரண நியமனம்



கொழும்பு, செப் 24

அரச கணக்குகள் குழு எனப்படும் கோபா குழுவின் தலைவராக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ விதாரண நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேநேரம், 9 ஆவது பாராளுமன்றத்தில் பொது முயற்சியாண்மைக்கான நிலையியல் குழு எனப்படும் கோப்குழுவின் தலைவராக நேற்று முன் தினம் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித்த ஹேரத் நியமிக்கப்பட்டிருந்தார்.

பொது முயற்சியாண்மைக்கான நிலையியல் குழு (கோப்) மற்றும் அரச கணக்குகள் (கோபா) குழுக்களுக்கு தலா 22 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர்.

அமைச்சுகள், திணைக்களங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாகத்திறன் மற்றும் நிதி ஒழுங்கமைப்பு ஆகியவற்றைக் கண்காணிக்கும் அதிகாரம் கோபா குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வீடு ஒன்றில் எரிந்த நிலையில் பெண்ணின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு, செப் 24

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திருப்பழுகாமத்தில் உள்ள வீடு ஒன்றில் எரிந்த நிலையில் பெண் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டது.

திருப்பழுகாமம் திரௌபதையம்மன் ஆலய வீதியில் உள்ள வீடு ஒன்றின் முன்பக்கத்திலேயே இந்த சடலம் மீட்கப்பட்டது.

மீட்கப்பட்ட சடலம் அந்த வீட்டில் வசித்துவந்த 64 வயதுடைய தில்லையம்மா புவனசிங்கம் என்பவரது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

விசாரணைகளைத் தொடர்ந்து சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.



# எருக்கலம்பிட்டி பகுதியில் 724 கிலோ கடலட்டை மீட்பு

மன்னார், செப் 24

மன்னார் பொலிஸ்பிரிவுக் குட்பட்ட எருக்கலம்பிட்டிப் பகுதியில் உரிய அனுமதி பத்திரங்கள் இன்றிக் கடல் அட்டைகளை உடைமையில் வைத்திருந்த எருக்கலம்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரை நேற்றுப் புதன்கிழமை மன்னார் பொலிஸாரால் கைது செய்துள்ளனர்.

மன்னார் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலுக்கு அமைவாக சிரேஷ்ட பொலிஸ் பொறுப்பதிகாரி பந்துல வீரசிங்கவின் பணிப்பில் மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கிருஷாந்தன் தலைமையிலான ஊழல் தடுப்புப் பிரிவினரே அனுமதிப் பத்திரம் இல்லாமல் 724 கிலோ 500 கிராம் கடலட்டைகளை உடைமையில் வைத்திருந்த நபரைக் கைது செய்தனர். கைப்பற்றப்பட்ட கடலட்டைகளின் பெறுமதி 50 இலட்சம் ரூபா என கணிப்பிடப்பட்டுள்ளது.

# வன்னி பிரதிப் பொலிஸ்மா அதிபர் செனவிரத்ன கடமைகளை ஏற்றார்

கிளிநொச்சி, செப் 24

வன்னி மாவட்டத்துக்கான புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபராக லால் செனவிரத்ன நேற்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

வன்னி மாவட்டத்தின் பிரதிப் பொலிஸ்மா அதிபராகக் கடமையாற்றி வந்த தம்மிக்க பிரியந்த களுத்துறை மாவட்டத்துக்கு மாற்றலாகிச் சென்றுள்ள நிலையில், வன்னிக்கான புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபராக தகவல் தொடர்பாடல் ஊடகத்துறைக்குப் பொறுப்பாக இருந்த லால் செனவிரத்ன நியமிக்கப்பட்டார்.

அவர் நேற்று மதகுருமார்களின் ஆசியுடன் உத்தியோக பூர்வமாக தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

பதவி ஏற்பு நிகழ்வு ஏ-9 வீதியில் அமைந்துள்ள பிரதிப் பொலிஸ்மா அதிபரின் காரியாலயத்தில் இடம்பெற்றது. இதன்போது புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு அணிவகுப்பு மரியாதை இடம்பெற்றது.

# செவ்வாய், வியாழன், சனிக்கிழமைகளில் கிராம சேவகர்கள் அலுவலகத்தில் இருப்பர்

கொழும்பு, செப் 24

கிராம அலுவலர்கள் அனைவரும் வாரத்தில் இரண்டரை நாள் அலுவலகத்தில் கடமையிலிருக்கவேண்டும் என்று அரச சேவைகள் அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

கிராம அலுவலர்கள் அனைவரும் செவ்வாய், வியாழக்கிழமைகளில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.15 மணி வரையும் சனிக்கிழமைகளில் நண்பகல் 12.30 மணி வரையும் தங்கள் அலுவலகங்களில் கடமையில் இருக்கவேண்டும் என்று அரச சேவைகள் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

செய்திகள்

# மக்கள் பிரச்னைகளைத் தீர்க்க ஜனாதிபதியின் அதிரடி திட்டம்

கொழும்பு,செப்.24

**மக்கள் மத்தியில் சென்று, அவர்கள் முகம் கொடுத்து வரும் பல்வேறு பிரச்னைகளை நேரடியாக இனங்கண்டு, தாமதிக்காமல் தீர்வுகளை வழங்குவதற்காக கிராமங்களுக்குச் செல்வதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ திட்டமிட்டுள்ளார்.**



மக்கள் முகம்கொடுத்து வருகின்ற பிரச்னைகளைத்தான், நேரடியாகக் கண்டு அவர்களின் கவலைகளைக் கேட்டு சரியான தெளிவொன்றை பெற்று நிவாரணங்களை வழங்குவது ஜனாதிபதியின் எதிர்பார்ப்பாகும்.

முதல் விஜயமாக பதுளை மாவட்டத்தின் ஹல்துமுல்லை பிரதேச செயலகப் பிரிவு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மக்கள் சந்திப்பு ஹப்புத்தளை 100 ஏக்கர் கிராமத்தில், குமாரதென்ன பாடசாலையில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகும்.

கிராம மக்கள், நீண்டகாலமாக தீர்த்து வைக்கப்படாத பொருளாதார மற்றும் சமூக பிரச்னைகளால் அல்லல்பட்டு வருவதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் காலத்தில் நாடு முழுவதும் மேற்கொண்ட விஜயங்களின்போது அது தெளிவாகியதாகவும் குறிப்பிட்டார். வாழ்வாதாரப் பிரச்னை, காணி மற்றும் வீடின்மை, காணிகளுக்கு உறுதிகள் இல்லாதிருத்தல், சுகாதாரம் மற்றும் போக்குவரத்து சேவைகள் போதுமானதாக இல்லாமை, பிள்ளைகளின் கல்வி பிரச்னைகள் மற்றும் பாடசாலையின் குறைபாடுகள், விவசாய மற்றும் குடிநீருக்கான நீரைப் பெற்றுக்கொள்வதில் உள்ள பிரச்னை, காட்டு யானைகள் ஊருக்குள் வருதல், விவசாய உற்பத்திகளை விற்க முடியாமை போன்றன அவ்வாறு இனங்காணப்பட்ட பிரச்னைகளில் முதன்மை யானவை.

கிராம மக்களுக்கு உள்ள பிரச்னைகளைப் புரிந்து கொண்டு, அவற்றை உடனடியாகத் தீர்ப்பதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டிய, அரச நிறுவனங்களின் ஊதாசீனம் மற்றும் செயற்றிறனின்மை போன்றவை பிறிதொரு பிரச்னையாகும்.

ஜனாதிபதி மிக முக்கிய கிராமங்களில் கண்காணிப்பு விஜயங்களை மேற்கொள்ளும் போது மக்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

செலவழிக்கப்படும் பணம் குறைத்துக்கொள்ளப்படும். கொழும்பிலிருந்து அதிகாரிகள் அழைத்துச் செல்லப்படமாட்டார்கள்.

மக்கள் பிரச்னைகளைத் தீர்ப்பதற்குப் பிரதேச அதிகாரிகள் மாத்திரமே பங்குபற்றுவர். மக்கள் சந்திப்புக்கு வருகை தந்து, தமக்குள்ள பிரச்னைகளை அறியத்தருமாறு ஜனாதிபதி கேட்டுக் கொண்டார்.

முன்வைக்கப்படும் பிரச்னைகளுக்கு முடியுமான வகையில் உடனடியாகத் தீர்வுகளை வழங்குவது ஜனாதிபதியின் எதிர்பார்ப்பாகும். தீர்ப்பதற்கு காலம் எடுக்கக்கூடிய பிரச்னைகள் மாத்திரம் பின்னர் தீர்த்து வைப்பதற்காக குறித்துக்கொள்ளப்படும்.

## ஹெரோயினுடன் நால்வர் கைது

கொழும்பு,செப்.24

கொழும்பின் சில பகுதிகளில் நேற்று முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புக்களில் ஹெரோயினுடன் சந்தேக நபர்கள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சப்புகஸ்கந்த பொலிஸாரால் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து கிரிபத்கொட - ஹுனுப்பிட்டிய வீதி எரிபொருள் நிரப்பு நிலையம் அருகே முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகத்திற்கிடமான ஆட்டோ சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இதன்போது, 230 கிராம் 450 மில்லிகிராம் ஹெரோயின் மீட்கப்பட்டதுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பரண வத்த, மாபோல - வத்தளை பகுதியைச் சேர்ந்த 28 வயதான நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய கல்கிஸ்ஸ - ஹலுதாகொட குறுக்குத்தெரு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது 3 கிராம் 100 மில்லி கிராம் ஹெரோயினுடன் அதே பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய நபரொருவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், நுகேகொட போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் முன்னெடுத்த சுற்றிவளைப்புக்களில் ஹெரோயினுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடமிருந்து 6 கிராம் 130 மில்லி கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது.

கனந்தபார - மிரிஹான பகுதியைச் சேர்ந்த 43 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, பேலியகொடை பொலிஸார் முன்னெடுத்த சுற்றிவளைப்பில் நுக வீதி, 90 ஆம் தோட்டத்திற்கு திரும்பும் பகுதியில் வைத்து 5 கிராம் 520 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

பேலியகொடை பகுதியைச் சேர்ந்த 35 வயது நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



## வடக்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர் நேற்று கடமையை பொறுப்பேற்றார்

யாழ்ப்பாணம், செப் 24

வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராக சஞ்சீவ தர்மரட்ண பதவியேற்றுள்ளார்.

காங்கேசன்துறையில் அமைந்துள்ள வடக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தில் நேற்று முற்பகல் அவர் கடமைகளைப் பொறுப்பேற்றார்.

அவருக்கு பாரம்பரிய முறையில் வரவேற்பளிக்கப்பட்டது.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராக சஞ்சீவ தர்மரட்ண, 2017ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராகக் கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆபாச வெளியீடுகளை தடை செய்யச் சட்டம்

### அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு,செப்.24

சிறுவர்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் ஆபாச வெளியீடுகளை தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஏனைய ஊடகங்கள் மூலமாக வெளியிடுதல் சமீப காலத்தில் வேகமாக அதிகரித்துள்ளது. இவ்வாறான விடயங்கள் தொடர்பில் செயற்படுவதற்கு அமைவான ஒழுங்கு விதிகள், குற்றவியல் சட்டத்தில் மற்றும் ஆபாச வெளியீடு கட்டளைச் சட்டத்தில் உள்ளடங்கிய போதிலும், தற்போதைய நிலைமைக்கு இதன் ஒழுங்கு விதிகள் போதுமானதாக இல்லை என்பது கண்டறியப்பட்டுள்ளது.

இதற்கமைவாக இவற்றிற்குத் தீர்வு என்ற வகையில் இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் முகவர் நிலையம் மற்றும் இலங்கை கணனி உடனடி பதில்கள் குழுவினால் சட்டமா அதிபரின் ஆலோசனையின் அடிப்படையில் புதிதாக திருத்த சட்ட மூலம் ஒன்றைத் தயாரிப்பதற்குத் தேவையான தகவல்களை உள்ளடக்கிய ஆவணம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அந்த ஆவணத்தை அடிப்படையாகக் கொண்டு புதிய சட்டமூலம் ஒன்றைத் தயாரிப்பதற்காக சட்ட வரைபு பிரிவிற்கு ஆலோசனை வழங்குவதற்காக நீதி அமைச்சர் அலி சப்ரியால், சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## சுமண ரத்ன தேரருக்கு எதிராக அழைப்பாணை

மட்டக்களப்பு,செப்.23



அரச அதிகாரிகளின் கடமைக்கு தடை ஏற்படுத்தி, இடையூறு விளைவித்தமை தொடர்பில் மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமண ரத்ன தேரருக்கு எதிராக மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம் அழைப்பாணை வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் சுமண ரத்ன தேரர் பொலிஸ் நிலையத்திலோ, அல்லது நீதிமன்றத்திலோ முன்னிலையாகி வாக்குமூலம் வழங்க வேண்டும் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கூறினார்.

## 60 ரூபா நிவாரண விலைக்கு தேங்காய்

கொழும்பு,செப்.24

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் பாவனையாளர்களுக்கு 60 ரூபா நிவாரண விலையில் தேங்காயை கொள்வனவு செய்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்டத் தொழிற்துறையுடன் தெங்குச் செய்கை சபை இணைந்து இந்த வேலைத்திட்டத்தை மேற்கொண்டுள்ளது.

இதன் கீழ், கொழும்பு மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களில் லொறி மூலம் தேங்காய் விநியோகிக்கும் வேலைத்திட்டம் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் தேங்காய் ஒன்றை 60 ரூபாவுக்கு பெற்றுக் கொள்ள முடியும். தேங்காயின் விலையைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான சகல நடவடிக் கைகளையும் அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த தெரிவித்தார்.

# 25 ஆயிரம் சிங்கள குடும்பங்கள் வடக்கிலிருந்து விரட்டப்பட்டனர்

## அவர்களை கண்டுபிடிக்கக் கோருகிறார் வீரசேகர



கொழும்பு, செப்.24

**போர் காலத்தில் வடக்கில் இருந்து 25 ஆயிரம் சிங்கள குடும்பங்களும், 15 ஆயிரம் முஸ்லிம் குடும்பங்களும் விரட்டியடிக்கப்பட்டன. விரட்டப்பட்டவர்கள் இன்று எங்கு உள்ளனர் என்பதை தேர்தல் ஆணைக்குழு ஆராய வேண்டும். 19 இன் மூலம் உண்மைகள் மறைக்கப்பட்டுவிட்டன. அவர்களை மீண்டும் குடியேற்றி அவர்களுக்கு தேர்தல் உரிமைகளை வழங்க வேண்டும்.**

இவ்வாறு பாராளுமன்றத்தில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர நேற்றுத் தெரிவித்தார்.

2019ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டுக்கான நிதி ஆணைக்குழுவின் செயலாற்றுகை அறிக்கை, தேர்தல்கள் ஆணைக்குழுவின் மூன்றாம் காலாண்டு செயலாற்றுகை அறிக்கை ஆகியவற்றின் மீதான சபை ஒத்திவைப்பு பிரேரணையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

யுத்த காலகட்டத்தில் விடுதலைப் புலிகளினால் மக்கள் விரட்டியடிக்கப்பட்டனர். அதிகளவிலான சிங்கள, முஸ்லிம் மக்கள் வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்டனர். 25 ஆயிரம் சிங்கள குடும்பங்களும், 15 ஆயிரம் முஸ்லிம் குடும்பங்களும் வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்டனர். அவர்களை மீண்டும் வடக்கில் குடியேற்றி அவர்களின் தேர்தல் உரிமையை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விரட்டியடிக்கப்பட்ட மக்கள் இன்று எங்கு உள்ளனர்? அவர்களுக்கு தேர்தல் உரிமை உள்ளதா? என்பதையும் தேர்தல்கள் ஆணைக்குழு ஆராய்ந்து பார்க்க வேண்டும். 19 ஆம் திருத்தம் கொண்டு வரப்பட்டு நாட்டின் உண்மைகள் மூடி மறைக்கப்பட்டு வருகின்றது - என்றும் அவர் கூறினார்.



# 10 ஆயிரம் தொழில் வாய்ப்பு கோரி வேலையற்ற பட்டதாரிகள் பேரணி

கொழும்பு, செப். 24

வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றிணைந்து நேற்று கோட்டை புகையிரத நிலையத்தில் இருந்து ஜனாதிபதி அலுவலகம் வரை பேரணியில் ஈடுபட்டனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்த 10 ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகளுக்கான தொழில் நியமனம் இன்னும் வழங்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வழிகாட்டுதலில் 50 ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகளுக்கு தொழில்வாய்ப்பு வழங்கப்பட்டபோது, வெளிநாட்டுப் பல்கலைக்கழகம், ஊழியர் சேமலாப நிதியம் போன்ற காரணங்களுக்காக பலருக்கு சந்தர்ப்பம் நிராகரிக்கப்பட்டது.

இது தொடர்பில் மேன்முறையீடு செய்யப்பட்டபோதும், இதுவரை விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படவில்லை என்று கூறப்படுகின்றது. இந்நிலையிலேயே 10 ஆயிரம் தொழில் வாய்ப்புக்களை கூறியே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

# மக்களின் காணிகளை அரசாங்கம் ஆக்கிரமிப்பது மோசமான செயல்

## செல்வம் எம்.பி. சபையில் விசனம்

கொழும்பு, செப். 24

யுத்தத்திற்குப் பின்னர் வன்னி மாவட்ட மக்கள் அதிகளவில் கஷ்டங்களை சந்தித்து வருகின்றனர். மகாவலி அபிவிருத்தி வலயம் என்ற பெயரில் பொதுமக்களின் நிலங்களை அரசாங்கம் ஆக்கிரமிப்பது மோசமான செயல் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் சபையில் தெரிவித்தார்.

2019 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டுக்கான நிதி ஆணைக்குழுவின் செயலாற்றுகை அறிக்கை, தேர்தல்கள் ஆணைக்குழுவின் செயலாற்றுகை அறிக்கை ஆகியவற்றின் மீதான சபை ஒத்திவைப்பு வேளை விவாதம் நேற்று பாராளுமன்றத்தில் இடம்பெற்றபோதே இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தெரிவித்தவை வருமாறு,

பிரதமருக்கு ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகின்றேன், வன்னியை தாண்டி வடக்கிற்கு செல்லும் அமைச்சர்கள் முதலில் வன்னிக்கு வந்து எமது மக்களின் நிலைமைகளை அவதானிக்க வேண்டும். எமது மக்கள் அதிகளவில் கஷ்டப்பட்டு வருகின்றனர். மலசல



கூடம் இல்லாத கிராமங்கள் இருப்பது மிகவும் வேதனைக்குரியது. இதனால் பெண்கள் அதிக சிரமங்களை சந்திக்க நேர்கின்றது. இந்த விடயத்தில் பிரதமர் அமைச்சர்களுக்கு ஆணையிட்டு வன்னி மாவட்டத்தை கவனத்தில் கொள்ள வேண்டும்.

போருக்குப் பின்னர் எமது மக்கள் பல பிரச்னைகளை சந்தித்து வந்தனர். மீள் குடியேற்ற விடயங்களில் சொந்த நிலங்களில் அரசாங்க ஆக்கிரமிப்பு இடம்பெற்று வருகின்றது. குறிப்பாக மகாவலி வலயம் மிக மோசமாக எமது மக்களை பாதிக்கின்றது. பறவைகள் சரணாலயம் எனக் கூறிக்கொண்டு மக்களின் காணிகள் அபகரிக்கப்படுகின்றன. இவற்றை கவனத்தில் கொள்ளவில்லை என்றால் மக்களின் வாழ்வாதாரம் மோசமாக பாதிக்கப்படும் - என்றார்.

# புலிகளின் அரசியல் தலைவர் சம்பந்தன்

## சாடுகிறார் அமைச்சர் வீரசேகர

கொழும்பு, செப். 24

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் புலிகளின் அரசியல் தலைவர் என்று விமர்சித்துள்ளார் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர.

நிதி ஆணைக்குழு, தேர்தல்கள் ஆணைக்குழுவின் செயலாற்றுகை அறிக்கை தொடர்பான ஒத்திவைப்பு வேளையில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சுயாதீன ஆணைக்குழுக்களால் நாடு நாசமாகிவிட்டது. கடந்த ஆட்சியில் அரசமைப்பு சபையில் இருந்தவர்கள் ரணில் விக்ரமசிங்கவின் கையாள்களாக இருந்து தீர்மானம் எடுத்தனர். அப்போது எதிர்க்கட்சி தலைவராக இருந்த ஆர்.சம்பந்தன் எப்படிப்பட்டவர் என்றால் விடுதலைப் புலிகளின் அரசியல் தலைவர்.

இவர்கள் இருவரும்தான் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு உறுப்பினர்களை நியமித்தனர். அவர்களில் ஒருவர்தான் ரட்ண ஜீவன் ஹூல். தகுதியில்லாத ஒருவரை இவர்கள் தேர்தல்கள் ஆணைகுழுவிற்கு கொண்டுவந்தனர். நல்லாட்சியில் நடந்த ஊழல் குற்றங்களின் போது, வழக்குகள் தொடுக்காத ஹூல் 2018 ஆம் ஆண்டு பாராளுமன்றம் கலைக்கப்பட்ட போது முதலாவது வழக்கை தொடுத்தார்.

எனவே இவர்களின் கொள்கை என்ன என்பது எமக்கு நன்றாக தெரியும். தேர்தல்கள் ஆணைக்குழுவில் உள்ள பக்கச்சார்பான, என்.ஜி.ஓ காரர்களை நீக்க எமக்கு 20 வது திருத்தம் வேண்டும் - என்றார்.

# புதிய அரசமைப்பில் மாகாணங்களுக்கு பொலிஸ், காணி அதிகாரம் வேண்டாம்

## இதுவே அரசின் நிலைப்பாடு என்கிறார் அமைச்சர் பிரசன்ன

கொழும்பு, செப். 24

புதிய அரசமைப்பில் மாகாண சபை வேண்டுமா? வேண்டாமா என்பதை தீர்மானித்தாக வேண்டும். எவ்வாறு இருப்பினும் மாகாணங்களுக்கு பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்க வேண்டாம் என்பதே எமது நிலைப்பாடு.

இப்படி பாராளுமன்றில் கூறியுள்ளார் சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க.

நிதி ஆணைக்குழு, தேர்தல்கள் ஆணைக்குழுவின் 2019 ஆண்டுக்கான இறுதி, மூன்றாம் காலாண்டுக்கான செயலாற்றுகை அறிக்கையின் ஒத்திவைப்பு விவாதத்தின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சுயாதீன ஆணைக்குழுக்களை நாம் வெறுக்கவில்லை, ஆனால், சுயாதீன ஆணைக்குழுக்கள் என ருவாக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் சுயாதீனமாக செயற்பட வேண்டும். கடந்த காலங்களில் அவ்வாறு அது சுயாதீனமாக செயற்படவில்லை. சுயாதீன ஆணைக்குழு அரசியல் சார்ந்து இருக்க முடியாது. 19 ஆம் திருத்தம் எந்த விதத்திலும் அர்த்தமில்லை. எனவே, 19 ஆம் திருத்தத்தை நீக்க வேண்டும் என்பதே எமது தேர்தல் பிரசாரமாக இருந்தது, 19 ஆம் திருத்தம் நீக்கப்பட்டு 20 ஆம் திருத்தம் கொண்டுவரப்படும் என்றார்.

# வடக்கில் விளையாட்டுத்துறை மேம்பாட்டுக்கு திட்டம்

## அமைச்சர் நாமல்

கொழும்பு, செப். 24

முல்லைத்தீவு, மன்னார் மாவட்ட விளையாட்டு மைதான நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்யவும் வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் விளையாட்டு பாடசாலைகளை அபிவிருத்தி செய்யவும் தேவையான நிதியை எதிர்வரும் வரவு - செலவு திட்டத்தினூடாக ஒதுக்கப்படும் என்று இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினாவின் போது தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டு மைதானத்திற்கு காணி தெரிவு செய்யப்பட்டு இணைப்புக் குழுக் கூட்டத்தில் அனுமதி பெறப்பட்டது. ஆனால், அந்தக் காணிக்கு தனியார் உரிமையாளர் ஒருவர் உரிமை கொண்டாடும் நிலையில் நிர்மாணப்பணிகள் தடைப்பட்டுள்ளன. மன்னார் மாவட்ட விளையாட்டு மைதானத்திற்கு 32 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டது. இணைப்பு குழு அனுமதி பெறப்பட வுள்ளதோடு 2021 இல் இந்த திட்டம் ஆரம்பிக்கப்படும்.

மன்னார் எமில் நகர பொது விளையாட்டு மைதான பணி தொல்பொருள் பிரச்னையால் தடைப்பட்டது. அந்தப் பிரச்னை தீர்க்கப்பட்டுள்ளது. எதிர்வரும் காலத்தில் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்படும். வடக்கிலுள்ள விளையாட்டு மைதானங்களுக்கு நிதி ஒதுக்குவது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. தேவையான நிதி ஒதுக்கப்படும்- என்றார்.

ஈழநாடு
Eelanadu

DREAM11 IPL

இன்றைய ஆட்டம்

KINGS XI PUNJAB எதிர் ROYAL CHALLENGERS BANGALORE

பஞ்சாப் பெங்களூர்

மைதானம் : டுபாய்
நேரம் : இரவு 7.30 (இலங்கை)

# ரோஹித் சர்மா அதிரடி மும்பை இலகு வெற்றி





அபுதாபி, செப். 24

ரோஹித் சர்மாவின் அதிரடி ஆட்டத்தால் கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணியை 49 ஓட்டங்களால் வெற்றி கொண்டது மும்பை இந்தியன்ஸ் அணி.

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடக்கும் ஐ.பி.எல். தொடரில் நேற்று நடந்த லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் அணியும் கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணியும் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற கொல்கத்தா முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்யவே, மும்பை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

குயின்ரன் டி கொக், ரோஹித் சர்மா தொடக்க வீரர்களாகக் களமிறங்கினர். ஆரம்பம் மும்பை அணிக்கு அதிர்ச்சியானது. சிவம் மவியின் புல் ஷொட் பந்தை எல்லைக்கோட்டுக்கு வெளியே அனுப்ப முயன்றார் கொக். உயர்ந்த பந்தை நிகில் நாயக் இலகுவாகப் பிடியெடுத்தார்.

ரோஹித்துடன் சூர்யகுமார் இணைந்து அதிரடி ஆட்டத்தைத் தொடங்கினார். இதனால் அணியின் ஓட்ட எண்ணிக்கை மளமளவென்று உயர்ந்தது. 10 ஓவர்களில் 98 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் சூரியகுமார் யாதவ் ஓட்டம் ஒன்றைப் பெற முற்பட்டு 'ரன் அவுட்' ஆனார்.

அடுத்து வந்த திவாரி 21 ஓட்டங்களுடன் ஆடமிழந்தார். அவரைத் தொடர்ந்து அதிரடியாக ஆடி 6 சிக்ஸர், 3 பௌண்டரிகளுடன் 80 ஓட்டங்களைக் குவித்த ரோஹித் சர்மா ஆட்டமிழ்ந்து வெளியேறினார்.

கார்திக் பாண்ட்யா 18 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது ரஸலின் யோர்க்கர் பந்தில் ஹிட் விக்கெட் ஆனார்.

20 ஓவர்கள் நிறைவில், 5 விக்கெட்களை இழந்து 195 ஓட்டங்களைப் பெற்றது.

கொல்கத்தாவின் பந்து வீச்சில், சிவம் மவி 2 விக்கெட்களையும், சுனில் நரைன், ரஸல் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

196 என்ற பெரும் இலக்கைத் துரத்த ஆரம்பித்த கொல்கத்தாவுக்கு தொடக்கம் கொடுத்த ஷப்மன் கில் (7 ஓட்டங்கள்) சுனில் நரைன் (9) என்று சோபிக்கவில்லை.

கப்டன் கார்த்திக் - ராணா இணை மட்டும் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. கார்த்திக் 30, ராணா 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். பின் வந்த, மோர்கன் 16, ரஸல் 11, நாயக் 1 என்று சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

எனினும் அடுத்துக் களமிறங்கிய கம்மின்ஸ் அதிரடியாக ஆடினார். 4 சிக்ஸர் விளாசியவர் 12 பந்துகளில் 33 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

20 ஓவர்கள் நிறைவில் கொல்கத்தா 9 விக்கெட்களை இழந்து 146 ஓட்டங்களையே பெற்றது. இதனால் அந்த அணி 49 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

மும்பை இந்தியன்ஸின் பந்து வீச்சில், போல்ட், பற்றின்ஸன், பும்ரா, சாகர் ஆகியோர் தலா 2 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக ரோஹித் சர்மா தெரிவானார்.

## ஐ.பி.எல். தொடரிலிருந்து விலகினார் மிற்சல் மார்ஷ்

அபுதாபி, செப். 24

சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியின் மிற்சல் மார்ஷ் ஐ.பி.எல். போட்டியிலிருந்து விலகியுள்ளார். இதையடுத்து புதிய வீரர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியின் 3-ஆவது லீக் ஆட்டத்தில் சன்ரைசர் ஹைதராபாத் அணியை 10 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பெங்களூர் அணி வீழ்த்தியது.

இந்த ஆட்டத்தின்போது சன்ரைசர்ஸ் அணியைச் சேர்ந்த சகலதுறை வீரர் மிற்சல் மார்ஷ் காயமடைந்தார். இதனால், அவர் ஐ.பி.எல். போட்டியிலிருந்து விலகியுள்ளார்.

2017 ஆம் ஆண்டிலும் புனே அணிக்காகத் தெரிவானபோது காயம் காரணமாகப் போட்டியிலிருந்து வெளியேறினார்.

மார்ஸூக்குப் பதிலாக மேற்கிந்தியத் தீவுகள் அணியின் சகலதுறை வீரர் ஜேசன் ஹோல்டர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



## பிரெஞ்சு ஓப்பன் ரெனிஸ்; பியான்கா விலகல்



பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸில் இருந்து முன்னணி வீராங்கனைகளில் ஒருவரான கனடாவின் பியான்கா விலகியுள்ளார்.

2019 அமெரிக்க ஓப்பன் சம்பியனான இவர், இந்த ஆண்டுக்கான அமெரிக்க ஓப்பனிலும் பங்கேற்கவில்லை. இந்நிலையில் பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸில் இருந்தும் விலகினார்.

இது தொடர்பில் அவர் கூறுகையில், "உடல்நலம் மற்றும் பயிற்சிகளில் கவனம் செலுத்தும் வகையில் பிரெஞ்சு ஓப்பன் மற்றும் இந்த ஆண்டு மீதமுள்ள போட்டித் தொடர்களில் இருந்து விலகுவது என முடிவு செய்துள்ளேன். இது கடினமானது தான், எனினும் 2021 இல் ஒலிம்பிக் உள்ளிட்ட முக்கிய தொடர்களை எதிர்பார்த்துள்ளேன். தற்போது கிடைத்த ஓய்வு நாட்களில் சிறப்பான பயிற்சியில் ஈடுபட்டு வலிமையாக மீண்டு வருவேன்," என்றார்.

முன்னதாக அவுஸ்திரேலியாவின் அஷ்லே பார்டியும் பிரெஞ்சு தொடரிலிருந்து விலகியமை குறிப்பிடத்தக்கது.


# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்




7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க
**பகல்**
1.00 மணி : நலம்தானா ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
திரைப்படத்திலிருந்து காட்சிகள்
4.30 மணி : டேக் இட் ஈசி



5.00 மணி : பல்துறைக் கருவூலம்
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை
**இரவு**
7.00 மணி : சமையல் சமையல்
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : வேர்களும் விருட்சங்களும்



10.00 மணி : யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
விவேக் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN Television இசை

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
**இரவு**
7.00 மணி : ஓய்வெடு நிலவே
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு துாங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - தமிழ்
6.00 மணி : தரம் 07 - விஞ்ஞானம்
6.45 மணி : தரம் 08 - கணிதம்
7.30 மணி : தரம் 09 - விஞ்ஞானம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கலைப்பிரிவு) புவியியல்
10.00 மணி : க.பொ.த உயர்தரம்
(வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) பௌதீகவியல்
**பகல்**
12.00 மணி : தரம் 10 - கணிதம்
1.00 மணி : தரம் 09 - கணிதம்
2.00 மணி : தரம் 06 - ஆங்கிலம்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் தமிழ்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
தகவல் தொழில்நுட்பம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் சைவ சமயம்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
தகவல் தொழில்நுட்பம்
**இரவு**
7.00 மணி : க.பொ.த உயர்தரம்
கலைப்பிரிவு மாதிரி வினாத்தாள்

## சிவ ஒளி (ஓம் ரிவி)

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா - 01
10.00 மணி : புதியதோர் தொடக்கம்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா - 02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : அருளுரை
7.30 மணி : திருவாசகம்
08.00 மணி : திருவிழா - 01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி - ஆலயப் பாடல்கள்
8.00 மணி - ஜெபமாலை
9.00 மணி - மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி - திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி - வேளாங்கன்னி மாதா மன்றாட்டு
11.30 மணி - ஜெபமாலை
**பகல்**
12.00 மணி - திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி - மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி - நற்சிந்தனை
3.00 மணி - பாடல்
4.00 மணி - மறைவகுப்பு
4.30 மணி - திருகோணமலை திருப்பலி

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
12.00 மணி : லுகர் அதான்
**பகல்**
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : வேர் கொள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிரைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.09.2020 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.